# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

சித்தர்கள் செந்நெறி



www.saivamonline.com

# Contact Details



www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 14. சித்தர்கள் செந்நெறி

இலக்கியங்களின் வாழ்க்கையும் கூட இன்று, நிறுவனங்களைச் சார்ந்து நிற்கும் அவலத்தை உணர முடிகிறது. தலைவர்களைச் சாதி பிரித்துப் போற்றும் அவலத்தைப் போன்றதே இதுவும். தமிழில் தோன்றிய எல்லா இலக்கியங்களையும், ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயமே, இவை எம் உரிமைக் கருவூலங்கள் என்று போற்றுதல் வேண்டும். திருக்குறள் ஒன்றைத் தவிர வேறு நூல்களுக்கு இங்கே தமிழர்களின் முழு அங்கீகாரம் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தை, எஞ்சியிருக்கும் சமண அமைப்புக்கள் உரிமை கொண்டாடுவதும், மணிமேகலை போற்றுவார்

---

*திருக்குறள் ஒன்றைத் தவிர வேறு நூல்களுக்கு இங்கே தமிழர்களின் முழு அங்கீகாரம் கிடைக்கவில்லை.*

*கண்டுகொள்ளப்படாத, உரிமை கோரப்படாத, கரிசனத்துடன் எடுத்து ஆய்வு செய்யப்படாத ஒரு துறையாகவே சித்தர் நூல்கள் ஒளியிழந்து கிடக்கின்றன.*

---

இன்றி ஒடுங்கி வருவதையும், சிவப்பிரகாசரைப் பதிப்பதையும், கொண்டாடுவதையும் வீர சைவர்கள் மட்டும் தமதாக்கிக் கொண்டதுவும், தமிழ் எழில் ஒழுகும் நாலாயிரத்தை வைணவர்களில் ஒரு கூட்டத்தாரிடம் ஒப்படைத்து நிற்பதுவும், திருமுறைகளுக்குச் சைவத் திருமடங்களே கதி என்பதும் எங்கே போய் முடியும் என்ற கவலையைத் தருகின்றன.



www.saivamonline.com

மேற்குறித்தனவும், இவை போன்றனுவுமாகிய குழுக்களால் வரிக்கப்பெறாத ஆயிரக்கணக்கான இலக்கியங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்டது. தமிழ்நாட்டுச் சித்தர் இலக்கியங்களின் கதியும் இதுதான். கண்டுகொள்ளப்படாத, உரிமை கோரப்படாத, கரிசனத்துடன் எடுத்து ஆய்வு செய்யப்படாத ஒரு துறையாகவே சித்தர் நூல்கள் ஒளியிழந்து கிடக்கின்றன. சைவர்கள் பன்னிரு திருமுறை என்று ஒரு வரையறைக்குள் தம் நூல்களைக் கொண்டு வந்தனர். வைணவர்கள் நாலாயிரம் என எண்ணிக்கையிட்டுப் பாதுகாவல் செய்தனர். சித்தருலகம் சீந்துவாரின்றிக் கிடக்கிறது. பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள் என்ற குறியீடுகள் எல்லாம் உறுதி செய்யப்படாதவை.

சித்தம் போக்குச் சிவன் போக்கு என்பார்கள். காகபுஜண்டர் போன்ற ஓரிருவரைத் தவிர, ஏனைய, தமிழில் பாடிய சித்தர்கள் அனைவரும் சிவநெறி போற்றி நின்றவர்கள். வாலை என உமையைப்

***சைவத் திருமடங்களில் சித்தர்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லை. சித்தர் நெறி வந்த திருமூலருக்கே, சைவத் திருமுறைகளுள் பத்தாவது இடமே வழங்கப்பட்டது. அதுவும் நீண்ட தயக்கங்களுக்குப் பின்னரே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.***

***சித்தர்கள் சடங்குகளை எதிர்த்தவர்கள். சிவம் ஒன்றே போதும் என மன வழிபாட்டில் நின்றவர்கள். போலியான ஆசாரங்களைக் கேலி செய்தவர்கள். சமய வாழ்க்கையில் சாதியத்திற்கு இடம் இல்லை என்று உரத்த குரல் எழுப்பியவர்கள்.***

போற்றியவர்கள். மூலாதாரத் தத்துவமாக விநாயகனை ஏற்றுப் போற்றியவர்கள். முருக வணக்கமும் அவர்களிடம் இருந்திருக்கிறது. என்றாலும் மரபு வழிச் சைவர்கள் மற்றும் சைவத் திருமடங்களில் சித்தர்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லை. சித்தர் நெறி வந்த திருமூலருக்கே, சைவத் திருமுறைகளுள் பத்தாவது இடமே வழங்கப்பட்டது. அதுவும் நீண்ட தயக்கங்களுக்குப் பின்னரே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. காரணங்கள் பல உண்டு. ஒருவாறு யூகிக்க முடிகிறது.

மரபும் சடங்காசாரமும் சைவத்தில் நிறைந்து கிடக்கின்றன. சித்தர்கள் சடங்குகளை எதிர்த்தவர்கள். சிவம் ஒன்றே போதும் என மன வழிபாட்டில் நின்றவர்கள். போலியான ஆசாரங்களைக் கேலி



www.saivamonline.com

செய்தவர்கள். சமய வாழ்க்கையில் சாதியத்திற்கு இடம் இல்லை என்று உரத்த குரல் எழுப்பியவர்கள். உயிர் ஈடேற்ற முயற்சியில் சிறுசிறு முத்தி பேதங்களை முன்னிறுத்திட வேண்டாமென்று கெஞ்சியவர்கள். வேதாந்த சித்தாந்த சமரச நிலைகண்ட வித்தகச் சித்தர்கணம் என்பது தாயுமானார் பதிவு. ஆலய வழிபாட்டுக்கும், விக்கிரக ஆராதனைக்கும் நேசக்கரம் நீட்ட மறுத்தவர்கள். இவை மரபு வழிச் சைவர்களுக்கு ஏற்புடையன அல்லவே. வள்ளலாரை அன்னார் இன்றுவரை ஏற்றுப் போற்ற முன் வாராமையே சான்றாகிறது. திருமூலரைப் போல் வள்ளலாரையும், சைவம் ஏற்க வேண்டிய காலம் ஒன்று வந்தே தீரும்.

***திருமூலரைப் போல் வள்ளலாரையும், சைவம் ஏற்க வேண்டிய காலம் ஒன்று வந்தே தீரும்.***

***சித்தர்களைச் சிவநெறியோடு இணைப்பதற்கு வாய்த்த தருணம் இது. சித்த நெறி போற்றுவாரும், சித்த நூல் ஆய்வாளர்களும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சித்தர் வரலாறுகள் ஆராய்ந்து நிறுவப்பட வேண்டும். நூல்கள் முறையாகத் தொகுக்கப்பட வேண்டும்.***

நல்லவேளையாக மரபு வழிச் சைவர்களின் கட்டு நெகிழ்ந்து வருகிறது. கடுஞ் சுத்த சைவம் எல்லாம் கதைக்கு உதவாது என்பது உணரப்பட்டு வருகிறது. சித்தர்களைச் சிவநெறியோடு இணைப்பதற்கு வாய்த்த தருணம் இது. சித்த நெறி போற்றுவாரும், சித்த நூல் ஆய்வாளர்களும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சித்தர் வரலாறுகள் ஆராய்ந்து நிறுவப்பட வேண்டும். நூல்கள் முறையாகத் தொகுக்கப்பட வேண்டும். சித்தர் நூல்களில் காணப்படும் மருத்துவக் கூறுகள் கண்டறிந்து மெய்ப்பிக்கப்பட வேண்டும். சித்தர் சமயம் இன்னது என்று உறுதி செய்யப்பட வேண்டும். சித்த மருத்துவத்திற்கும் சித்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய கொடைகள் கண்டறியப்பட வேண்டும். யார் செய்யப் போகிறார்கள் என்பதுதான் புரியாது நிற்கிறது.

கோரக்கச் சித்தர் பற்றியும், காகபுஜண்டர் பற்றியும் ஆராய்ந்து, பெருமுயற்சியோடு இரண்டு நூல்களை நான் வெளிக் கொணர்ந்தேன். மறுபதிப்புச் செய்வாரைக் காணோம். தரவுகள் தேடித் தொகுத்து அடுத்த முயற்சியில் ஈடுபட நேசக்கரம் நீட்டுவாரை எத்திசையிலும் காண முடியவில்லை. பல்கலைக் கழகங்களில் உள்ள தத்துவத்துறைகள் இம்முயற்சியில் ஈடுபடலாம். முனைவர் பட்டத்திற்கு ஆய்வாளர்களைத்



www.saivamonline.com

தயாரிப்பதும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நடத்துவதுமே தலையாய பணி என்று கருதுவோரால் இவற்றைச் சாதிக்க இயலாது. பல சித்தர்களை வரித்துக் கொண்டு, சித்தர் பீடங்கள் பல செயல்பட்டு வருகின்றன. அவைகளும் குருபூஜை கொண்டாட்டங்களிலேயே கருத்தூன்றி நிற்கின்றன.

*சித்தர் பீடங்கள் பல செயல்பட்டு வருகின்றன. அவைகளும் குருபூஜை கொண்டாட்டங்களிலேயே கருத்தூன்றி நிற்கின்றன.*

*பூடகச் சொற்கள் பல பொருள் காண மாட்டாது அங்கே உறங்கிக் கிடக்கின்றன. கரந்துறை உரையாடல்கள் கண்டு தெளியப்பட வேண்டியுள்ளன.*

சித்தர்களிடம் நல்ல தமிழ் இருக்கிறது. சித்தர் பாடல்களே சந்தக் கவிதைகளின் மூல வடிவங்கள். யாப்பலங்காரங்களுக்குக் கட்டுப்படாத-ஆனால் அழகிய கவிதை நெறிகளை அவர்கள் படைத்தளித்துள்ளனர். பூடகச் சொற்கள் பல பொருள் காண மாட்டாது அங்கே உறங்கிக் கிடக்கின்றன. கரந்துறை உரையாடல்கள் கண்டு தெளியப்பட வேண்டியுள்ளன. சித்தர்களைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களுக்கு அவர்களையும், அவர்கள் தமிழையும் இனங்காட்ட சில சித்தர்களைப் பற்றி நான் எழுதினேன். அவற்றை முன்பு எழுதியவாறே மீண்டும் இங்கே பதிவு செய்துள்ளேன். சித்தர்களுக்கு வாழ்வு தர வேண்டும் என்ற எண்ணம் சிலருக்காவது அரும்புமானால் எல்லாருக்கும் அது மகிழ்ச்சியைத் தரும்.

## 1. கோரக்கச் சித்தர்

தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சித்தர்கள் பலராயினும் அவருள் சிலரைத் தொகுத்துப் பதினெண் சித்தர்கள் என்று குறிக்கும் வழக்கு நிலவி வருகிறது. பதினெண் சித்தர்களுள் ஒருவர் கோரக்கச் சித்தர். கோரக்கநாதர் என்றும் இவர் அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாது தென்மாநிலங்களிலும் வடநாட்டிலும் சீனா முதலிய கிழக்கு நாடுகளிலும் இவர் வரலாறு அறியப்பட்டுள்ளது. கோரக்கர், மச்சேந்திரர் என்ற சித்தரின் மாணாக்கராக அறியப்படுகிறார்.

பிள்ளைப் பேறு வாய்க்காத பிராமணப் பெண் ஒருத்திக்கு ஒருமுறை மச்சேந்திரர் விபூதிப் பொட்டலம் ஒன்றை வழங்கி, இதனைத் தண்ணீரில் கலந்து பருகினால் கருவாய்க்கும் என்று தெரிவித்து விடைபெறுகிறார். பிறர் சொற்கேட்டு நம்பிக்கை இழந்த அந்தப் பெண்



www.saivamonline.com

விபூதியைக் குப்பை மேட்டில் வீசிவிடுகிறாள். பல ஆண்டுகள் கழித்து அவ்வழியே வந்த மச்சேந்திரர் பிராமணப் பெண்ணைச் சந்தித்து, உன் மகனை அழை, நான் ஆசீர்வதிக்கிறேன் என்று கூற அவள் கண்ணீர் சிந்தி நடந்ததை விவரிக்கிறாள்.

அவள் காட்டிய குப்பை மேட்டை ஒரு குச்சியில் கிளறிக் "கோரக்கா வருக" எனச் சித்தர் அழைக்கக் குப்பை மேட்டிலிருந்து கோரக்கர் வெளிப்பட்டு மச்சேந்திரரைத் தொடர்ந்து பயணித்து அவர் சீடராகிறார். "கோரக்கர்" என்ற சொல்லுக்குக் குப்பையில் உதித்தவர் என்பது பொருள். ஆசிரியரின் விருப்பத்தை நிறைவேற்றத் தம் கண்களில் ஒன்றைப் பெயர்த்துக் கொடுத்து ஒரு பெண்மணியிடம் வடை ஒன்றைப் பெற்றவர் இவர். நெறி கடந்த தம் ஞானாசிரியரை நெறிப்படுத்த அவர் குழந்தையைக் கல்மீது மோதிச் சுக்கு நூறாக்கிப் பின் உயிர் பெறச்செய்தார். கல்மலை ஒன்றைச் சிறுநீர் பெய்து பொன்மலையாக்கினார். உமையம்மை ஒருபெண் வடிவில் காட்சியளித்து இவர் பசிப்பிணி தீர அன்னம் வழங்கினார். அல்லமதேவரோடு வாட்சண்டையிட்டுச் சிவன் அருள்பெற்றவர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர். இவர் ஜீவசமாதி நாகப்பட்டினத்தை அடுத்த வடக்குப்பொய்கை நல்லூரில் அமைந்துள்ளது. ஐப்பசிப் பௌர்ணமி நாளில் பெருவிழா நடைபெற்று வருகிறது. இவர் ஜீவசமாதி கூடிய காலம் கி.பி. 1233 என்று அறியவருகிறது.

மருத்துவம், யோகம், ஞானம் பற்றிய நூல்கள் கோரக்கரால் அருளிச் செய்யப்பெற்றன. போகர் இவருக்கு நெருங்கிய நண்பர். கஞ்சாவைத் தம் மருத்துவ நெறிக்கு முதலாகக் கொண்டார். சீனநாடு சென்று 500 ஆண்டுகள் வாழ்ந்து பல சித்தாடல்களை நிகழ்த்தியவர். உமையை வாலைத் தெய்வமாகப் போற்றி நின்று அருள்பெற்றவர். சித்தமருத்துவநெறி, மறை பொருளாகவன்றி வெளிப்பட விரித்துரைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்.

கோரக்கர் இயற்றியனவாக 40 நூல்கள் அறியப்படுகின்றன. இவர் இயற்றிய ஏழு நூல்களை கி.பி. 1975-இல் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. ஏழுநூல் தொகுதி என்பது அதன் பெயர். சிவயோகி, மா. இரத்தினசபாபதி பிள்ளை என்பார் ஏடு பெயர்த்து எழுதியுள்ளார். ந. சேதுரகுநாதன் குறிப்புரை வரைந்துள்ள இதனுள் 1. சந்திரரேகை 200, 2. நமநாசத்திறவுகோல் 3.இரவி மேகலை 75, 4. முத்தாரம் 5, நாதபேதம் 25 ஆகிய ஐந்து



www.saivamonline.com

நூல்களும் போகர் இயற்றிய இரண்டு நூல்களும் இடம் பெற்றுள்ளன.

கோரக்கச் சித்தரின் நூல்களுள் தலையாயது சந்திரரேகை 200 என்பதாகும். 200 ஆசிரியவிருத்தங்களால் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. கதிரவன் ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரனைப் போல் சிவனருள் ஞான ஒளிவீசுவதால் இந்நூல் சந்திரரேகை எனப் பெயர் சூட்டப் பெற்றதாகத் தெரிகிறது. உமையை இந்நூல், பார்வதி, தாய், சாமளரூபி, வீரி, பாஸ்கரி, பஞ்சாட்சரதேவி, பரிபுரை, பங்கயவேணி, மாலி என்றெல்லாம் பலவாகக் குறித்துச் செல்கிறது.

சந்திரரேகையில் விந்திறங்காமல் போகம் செய்யும் முறை (பாடல் 57;117,142), நரைதிரை நீங்க யோகாசனம் செய்தல் (66), உடல் தளர்ந்திடாமைக்கு வழி (69), வயது மிக வளர்ந்தோங்கவும், ஆயுள் நீடிக்கவும் வழிமுறைகள் (69, 73), ஊழ்வினை நீங்க (79), பிறப்பற (67, 81), காயகற்பவிளக்கம் (108), பேய், பில்லி, சூனியம், ஓட்ட (114 - 115), பிறர் கண்களுக்குப் புலப்படாமல் மறைதல் (116), என்றும் இளமையோடு வாழ (128), கரணயோகம் (130), சிவனைக் காணும் மந்திரம் (143) முதலிய வியப்பூட்டும் தகவல்கள் யாவும் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

---

***கோரக்கர் வழிபாடு இன்றும் நேபாள நாட்டில் அமைந்துள்ளது. காட்மண்டுவில் கோரக்கருக்குத் தனி ஆலயம் உள்ளது. கோரக்கருக்கு நேபாள அரசு விழா எடுத்துக் கொண்டாடுகிறது. அந்நாட்டுக் காகித நாணயங்களிலும், உலோக நாணயங்களிலும் கோரக்கர் உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது.***

---

சித்தர்களின் நூல்களில் மறைபொருளாக உரைக்கப்பட்டுள்ள பகுதிகளை எளிதில் உணர்ந்துகொள்ளக் கோரக்கர் அருளியதோர் நூல் நமநாசத்திறவுகோல். இந்நூலில் 23,24 ஆம்பாடல்களுள் கோரக்கர் உள்ளிட்ட 19 சித்தர்களின் கொள்கை முடிவுகள் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. ஏராளமான சித்தமருந்துகளின் செய்முறை இந்நூலினுள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் 49,50 ஆம் பாடல்களுள் எமனைவென்று நீண்ட நல்வாழ்வு வாழ உதவும் மிகுத்துவிஞ்சுக் குளிகை தயாரிக்கும் முறைமை விளக்கப்பட்டுள்ளது. கற்பகம் மற்றும் சுண்ணம் செய்யும் முறைமைகள் இரவிமேகலை 75 இல் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சித்தமருத்துவம் மறைபொருளாக நில்லாது



www.saivamonline.com

குழப்பமின்றி விளங்கித் தோன்றவேண்டும் என்ற கருத்துடையவர் கோரக்கர் என்பது இவரது நூல்களால் அறியவருகிறது.

கோரக்கர் வழிபாடு இன்றும் நேபாள நாட்டில் அமைந்துள்ளது. காட்மண்டுவில் கோரக்கருக்குத் தனி ஆலயம் உள்ளது. கோரக்கருக்கு நேபாள அரசு விழா எடுத்துக் கொண்டாடுகிறது. அந்நாட்டுக் காகித நாணயங்களிலும், உலோக நாணயங்களிலும் கோரக்கர் உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது. கூர்காஸ் என்ற இனத்தவர் தம்மைக் கோரக்கர் வழி வந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். மராட்டிய மக்கள் கோரக்கரை வீரர் தலைவராகப் போற்றிவருகின்றனர். வடநாட்டில் இவர் பெயரில் கோரக்பூர் என்ற பெரு நகரம் ஒன்று அமைந்துள்ளது.

தமிழ்நாட்டுச் சித்தர் மரபில் தன்னிகரற்று விளங்கும் கோரக்கர் நூல்களை ஓதி உணர்ந்தால் சாகாக்கலை வசமாகும்.

## 2. மச்சேந்திரர்

தமிழ்நாட்டுச் சித்தர்களை "நவநாத சித்தர்கள்" என்றும் "பதினெண் சித்தர்கள்" என்றும் தொகைப்படுத்திக் குறிப்பது வழக்கம். நவநாதசித்தர் பட்டியலில் ஆறாவதாக மச்சேந்திரநாதர் என்ற பெயரில் மச்சேந்திரர் குறிக்கப்படுகிறார். இவரே பதினெண் சித்தர்கள் பட்டியலில் பதினோராமவராக மச்சமுனி என்று சுட்டப்படுகிறார்.

***சித்தம் போக்குச் சிவம் போக்கு என்பது தமிழ் நாட்டில் வழங்கி வரும் ஒரு பழமொழி. உமையையும் பிற தெய்வங்களையும் சித்தர்கள் ஒரோ வழிப் பாடிப் பரவியுள்ளனர் என்றாலும் தமிழ்நாட்டுச் சித்தர்கள் சிவநெறி நின்று ஒழுகியவர்கள் என்பதே முன் குறித்த பழமொழியின் உண்மைப் பொருள்.***

மச்சேந்திரர் சித்தர் தலைவராகிய போகரின் மாணாக்கருள் ஒருவர். செம்படவர் மரபினர். இவர் இயற்றியவனவாகத் தமிழில் திவாகரம் 800, வைத்தியம் எண்ணூறு எனும் இரு நூல்கள் கிடைத்துள்ளன. சித்தர் மரபில் வரும் சுந்தரானந்தர், நந்தீசர் முதலியோர் மச்சேந்திரரோடு ஒரு சாலை மாணாக்கர்களாகப் போகரிடம் பயின்றனர் என்று தெரிய வருகிறது.

(டாக்டர் இரா செல்வக்கணபதி அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள கோரக்க சித்தர் அருள் வரலாறு என்ற நூலுள் இவர்தம் விரிவான வரலாற்று உண்மைகளைக் காணலாம்.)



www.saivamonline.com

சித்தம் போக்குச் சிவம் போக்கு என்பது தமிழ் நாட்டில் வழங்கி வரும் ஒரு பழமொழி. உமையையும் பிற தெய்வங்களையும் சித்தர்கள் ஒரோ வழிப் பாடிப் பரவியுள்ளனர் என்றாலும் தமிழ்நாட்டுச் சித்தர்கள் சிவநெறி நின்று ஒழுகியவர்கள் என்பதே முன் குறித்த பழமொழியின் உண்மைப் பொருள்.

சிவனருள் பெற்றுப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் நிகழ்த்திய ஆற்றல் மிக்க சிவனடியார்களாக அன்னார் திகழ்ந்தனர். உருவ வழிபாட்டையும் சமயச்சடங்குகளையும் சித்தர்கள் பெரிதாகப் போற்றிலர். எனவே, இவர்கள் சமய அருளாளர்களிடமிருந்து வேறு பிரித்து எண்ணப்பட்டனர். சித்தர்கண்ட நெறி சிவ நெறியே என்பது சித்தர் நூல்களால் அறிய வருகின்றது. மதுரையில் எல்லாம் வல்ல சித்தராகச் சிவன் எழுந்தருளி வந்து சித்தாடல் நிகழ்த்தியதைத் திருவிளையாடல் புராணம் விரித்துரைக்கிறது. ஒரு வகையில் "சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள்", என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிக்கும் தொகையடியார் குறிப்பு, சித்தமரபினரைத் தொகுத்துரைத்த ஒரு குறியீடாகவே அமைகிறது. ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள கருவூரரைச் சித்தராகப் போற்றும் மரபும் நிலவுகிறது.

---

***ஒரு வகையில் "சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள்", என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிக்கும் தொகையடியார் குறிப்பு, சித்தமரபினரைத் தொகுத்துரைத்த ஒரு குறியீடாகவே அமைகிறது.***

***தமிழ்நாட்டுச் சித்தர்கள் வரலாறுகள் குறித்த முறையான ஆய்வுகள் இதுகாறும் நிகழ்த்தப் பெறாமை பெருங்குறை. எல்லாம் செவி வழிச் செய்திகளின் பதிவாகவே நிற்கின்றன. சித்தர் பாடல்கள் பதிப்புகள் பலவும் குறைபாடு மிக்கனவாகவே அமைந்துள்ளன.***

---

தமிழ்நாட்டுச் சித்தர்கள் வரலாறுகள் குறித்த முறையான ஆய்வுகள் இதுகாறும் நிகழ்த்தப் பெறாமை பெருங்குறை. எல்லாம் செவி வழிச் செய்திகளின் பதிவாகவே நிற்கின்றன. சித்தர் பாடல்கள் பதிப்புகள் பலவும் குறைபாடு மிக்கனவாகவே அமைந்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் சித்தர் பாடல்களோடு பலர் தங்கள் சொந்த பாடல்களையும் எழுதி இணைத்த அவலங்களும் உண்டு. இக்கட்டுரை ஆசிரியரால் பெரிது முயன்று, தகவல்கள் திரட்டப்பட்டு ஒப்பாய்வு நிகழ்த்தி, கோரக்கர்



www.saivamonline.com

மற்றும் காகபுஜண்டர் வரலாறுகள் வெளிக் கொணரப்பட்டன. மச்சேந்திரர் திருப்பரங்குன்றத்தில் ஜீவ சமாதி அடைந்ததாகவும், இவர் ஆடித்திங்கள் 'உரோகிணி நாள்' முதல் பாதத்தில் அவதரித்தவர் என்றும் சித்தர் களஞ்சியம் என்ற தொகுப்பு நூலில் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஒரு முறை சிவபெருமான் ஒரு கடற்கரை அருகில் இருந்தவாறு உமையம்மைக்குத் தாரகமந்திரத்தை உபதேசித்தார். அக்காலை, கடல் மீன் ஒன்றன் வயிற்றில், முட்டைக்குள் இருந்த மீன் குஞ்சும் சிவன் உபதேசித்த தாரகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது. அம்மை சற்றே கண் அயர்ந்தார். கண்ட சிவன் தாரகத்தின் பெருமை அறியாதவள்போல் நீ உறங்கினை; அதன் பெருமையைப் பார் என்று உமையிடம் கூறிவிட்டுக் கரு உற்றிருந்த மீனைக் கருணையோடு நோக்கினார். மீன்வயிற்றிலிருந்து அழகிய ஆண் குழந்தை ஒன்று வெளிப்பட்டு அம்மை அப்பரை வணங்கி நின்றது. சிவன் அக்குழந்தைக்கு மச்சேந்திரன் என்று பெயர் சூட்டினார். நாடெங்கும் சென்று நமது நெறிபரப்பிச் சித்தாடி மக்கள் துயர்தீர்த்து வருக என்று அருள்பாலித்தார். மச்சேந்திரர் தோன்றிய வரலாற்றை அபிதான சிந்தாமணி இவ்வாறு எடுத்துரைக்கிறது.

மீன் வயிற்றில் தோன்றிச் சிவபரம்பொருளின் பரம கருணையைப் பெற்று, மச்சேந்திரர் ஓயாது உணர்ந்த சிவஞானம் கை வரப்பெற்றார். அம்மை அப்பர் நினைவோடு நாடெங்கும் சுற்றித் திரிந்தார். மலை முகடுகளிலும் காடுகளிலும் கடுந்தவம் புரிந்தார். சிவனருளால் அழியாத திருமேனியும், இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதமும், மக்கள் நோய்தீர்க்கும் மருத்துவத்திறமும், அளவற்ற சித்துக்களும் கைவரப் பெற்றார். உலகத்தார் கண்களுக்குத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாது தாம் இருக்குமிடம் தேடி வந்து எவரேனும் அன்னமிட்டால் உண்டு, சிவஞானியாகச் சிவயோகியாகச் சிவ சித்தராக மச்சேந்திரர் வாழ்ந்திருந்தார்.

ஒரு முறை மச்சேந்திரர் கொல்லி மலை விடுத்துப் பொதியமலைக்குப் புறப்பட்டார். வழியில் சம்பல் பட்டி என்ற சிற்றூரில் வாழ்ந்திருந்த சிவராம தீட்சிதர் என்பாரின் மனக் குறையை நீக்க அவர் துணைவிக்குத் திருநீறு அளித்து அவள் அதனைக் குப்பையில் வீசக் குப்பை மேட்டிலிருந்து ஒரு குழந்தையை வரவழைத்துச் சித்தாடல் நிகழ்த்தினார். மச்சேந்திரருடைய மாணாக்கருள் முதன்மையானவர் கோரக்கர். கோரக்கருக்கு உபதேசித்த பின் வடநாடு சென்று பல ஆண்டுகள் தங்கித் தவமியற்றிப் பின்னர் மலையாள நாடு திரும்பினார்.



www.saivamonline.com

மச்சேந்திரரின் சித்தாடல் கண்டு மயங்கிய மலை நாட்டு இளவரசி பிரேமளா என்பாள் அவரை விரும்பி மணம் பூண்டாள். அவர்கள் இல்லறத்தில் மீனநாதன் பிறந்தான். தம் ஞானாசிரியரை இல்லறக் கட்டுக்களிலிருந்து வெளிக் கொணரக் கோரக்கர் பலவாறு முயன்று இறுதியில் வெற்றி பெற்றார் மச்சேந்திரர் 300 ஆண்டுகளும் 62 நாள்களும் இப்பூவுலகில் வாழ்ந்திருந்தார் என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது.

*ஆங்கிலத்தில் திரு குப்தா என்ற பஞ்சாப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரால் மச்சேந்திரர் கோரக்கர் உரையாடல் என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வேதாந்தத் தத்துவ ஆய்வாக நடையிடுகிறது.*

ஆங்கிலத்தில் திரு குப்தா என்ற பஞ்சாப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரால் மச்சேந்திரர் கோரக்கர் உரையாடல் என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வேதாந்தத் தத்துவ ஆய்வாக நடையிடுகிறது. மச்சேந்திரரின் திவாகரம் எண்ணூறு பல்வேறு சித்தர் நெறிகளை விரித்துரைத்து நிறைகிறது. இவரது வைத்தியம் எண்ணூறு போகர் நெறிமுறையில் வந்த அரிய சித்த மருத்துவக் குறிப்புக்களை வழங்குகின்றதுன. சித்தர் சிலர் இல்லற நெறியிலும் வாழ்ந்தனர் என்பது மச்சேந்திரர் வரலாற்றால் உணர முடிகிறது. இனி வரும் ஆய்வுகளால் மச்சேந்திரர் வரலாறு மேலும் ஒளிபெறும் என்று நம்பலாம்.

## 3. காகபுஜண்டர்

இன்று தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் நாடி சோதிடம் என்ற கலையின் மூலவராகவும், முதல்வராகவும் திகழ்பவர் காகபுஜண்டர். நவநாதசித்தர்கள் பதினெண்சித்தர்கள் என்ற பட்டியல்களில் இவர் குறிப்பிடப்படவில்லை. இந்திய நாடு தழுவிய ஓர் அருளாளராக, வியப்பூட்டும் பல அனுபவங்களை அறிந்து அறிவிக்கவல்ல ஞான மூர்த்தியாகச் சித்தாடல்கள் வல்ல ஓர் இருடியாக, அற்புத ஞானம் நிறைந்த உபதேசங்களை வழங்கிய குருமூர்த்தியாகக் காகபுஜண்டர் திகழ்கிறார்.

வடபாரதத்தில் இவர் அறியப்பட்ட அளவு தென் தமிழ் நாட்டில் இவரை மக்கள் அறிந்திருக்கவில்லை. இந்தி மொழியில் இராமாயணம் எழுதிய துளசிதாசர், தம் இராமாயணத்தைப் படைக்கப் "புசுண்ட



www.saivamonline.com

இராமாயணம்" என்ற ஒரு நூலை முன் மாதிரியாகக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதனை இயற்றியவர் காகபுஜண்டரே ஆவார்.

***இன்று தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் நாடி சோதிடம் என்ற கலையின் மூலவராகவும், முதல்வராகவும் திகழ்பவர் காகபுஜண்டர்.***

## காகபுஜண்டர் பெருவாழ்வு

வடமொழியில் ஞானவசிட்டம் என்ற ஒரு நூல் உண்டு. அது வசிட்ட மாமுனிவரால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்ட ஓர் ஆத்மபோத நூல். அந்நூலுள் ஒரு கதையாகக் காகபுஜண்டர் வரலாறு இடம் பெற்றுள்ளது. மேற்குறித்த நூல் தமிழில் "ஞானவாசிட்ட அமல இராமாயணம்" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனுள் 29 ஆவது கதையாக இவர் வரலாறு "புசுண்டன் கதை" என்ற தலைப்பில் 99 பாடல்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

***காகபுஜண்டர் பாடியதாகத் தமிழில் காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற ஒரு நூலும், தனிப்பாடல்களாக 144 பாடல்களும் 16 குறள் வெண்பாக்களும் கிடைத்துள்ளன.***

காகபுஜண்டர் பாடியதாகத் தமிழில் காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற ஒரு நூலும், தனிப்பாடல்களாக 144 பாடல்களும் 16 குறள் வெண்பாக்களும் கிடைத்துள்ளன. மேலும் இவர் இயற்றியனவாக வைத்தியவாதயோகஞானம், வைத்திய வாதயோக சூத்திரம், மெய்ஞானவிளக்கம் என்னும் மூன்று நூல்களும் குறிக்கப்பட்டுள்ளன. நூல்களுள் இவர் காக வடிவனராகவும், பாம்பு (புஜண்டம்) வடிவினராகவும் குறிக்கப்பட்டுள்ளார். காகம் என்ற வடசொல் அவிட்ட விண்மீனைக் குறிக்கும். எனவே அந்நாளில் பிறந்த பாம்பின் பெயர் பூண்ட ஒரு சித்தராகவே இவர் இருத்தல் கூடும்.

## துளசிராமாயணக் குறிப்புகள்

துளசி இராமாயணத்தில் தலையாய நான்கு உரையாடல்களும் அடங்கும். இதில் மூன்றாவது உரையாடல் சிவனுக்கும் காகபுஜண்டருக்கும் இடையேயும், நான்காவது உரையாடல் காகபுஜண்டருக்கும் கருடனுக்கும் இடையேயும் நிகழ்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளன. துளசி இராமாயணத்தின் ஏழாவது காண்டமாகிய உத்தர காணடத்தில் காகபுஜண்டர் வரலாறு



www.saivamonline.com

விரித்துரைக்கப்பட்டுள்ளது.

சிவபிரான் முன்னிலையில் மதுவுண்டு அன்னங்கள் இரண்டு களித்திருந்தன. சிவன் அவற்றை உற்று நோக்க, அவற்றிடம் சிவகலை காக உருவத்துடன் பதிந்தது. பெண் அன்னம் இருபத்து ஒன்றாவதாகப் பொரித்த முட்டையிலிருந்து காகபுஜண்டர் தோன்றினார் என்று ஒரு குறிப்பு அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது. இவர் மனைவி பெயர் பகுளாதேவி. இவர் குமாரர் உரோமரிஷி என நாடி நூல்களில் குறிப்புகள் உள்ளன. பலகற்பகாலங்களையும் கடந்து பலயுகங்கள் மண்ணில் வாழ்ந்தவர் இவர்.

## அழகிய குறள் வெண்பாக்கள்

பலயுகங்கள் காகபுஜண்டர் உயிர் வாழ்ந்தமைக்குரிய மூல காரணங்களை அவரே குறிப்பிடுகிறார். சென்றதையோ, வரப்போவதையோ நான் ஒருக்காலும் நினைப்பது கிடையாது. நடப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பேன், என் மனம் நன்மையை அடையும்போது மகிழ்ச்சி அடைவதில்லை. தீமை ஏற்படும்போது துன்புறுவது இல்லை. எவன் உறவு? எவன் அந்நியன்? என்று நான் வேறு பிரித்துப் பார்ப்பதில்லை. ஆசை முதலான மனத்துன்பங்களுக்கு நான் இடம் கொடுப்பதில்லை.

***என் மனம் நன்மையை அடையும்போது மகிழ்ச்சி அடைவதில்லை. தீமை ஏற்படும்போது துன்புறுவது இல்லை. எவன் உறவு? எவன் அந்நியன்? என்று நான் வேறு பிரித்துப் பார்ப்பதில்லை. ஆசை முதலான மனத்துன்பங்களுக்கு நான் இடம் கொடுப்பதில்லை.***

“சித்தர் பதினெண்மர் செங்கையில் தோன்றாத அத்தனருள் புசுண்டன்யான்”. “நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாம் நிற்க ஆத்துமத்தில் ஆனந்தமாம்” “உலகமே மாயமென உன்மனதில் கண்டு நலமாக நாதனடி நம்பு.” “உலகியல் அறிந்தோர் ஒருநாளும் மாளார் பல நினைவை விட்டு நீ பார்.” “கண்டோரும் சொல்லார், கருத்தால் பெரியோரைத் தொண்டுசெய்து பெற்ற சுகம்.”

## அறம் உரைத்த பண்பு

சித்தர் நூல்கள் கடவுள் பத்திமை குறித்த வழிகாட்டுதல்களில் அதிகம் ஈடுபாடு கொள்வதில்லை. அவற்றுள் அறம் உரைக்கும் பகுதிகள்



www.saivamonline.com

பல உள்ளன. காகபுஜண்டர்,

> "தாம் என்ற உலகத்தில் மனிதரோடே
> சஞ்சாரம் செய்யாதே தனித்து நில்லே
>
> ஓமென்று ஊண்மிகுத்து உண்டிடாதே
> ஓரமாய் வழக்கதனை உரைத்திடாதே
> ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே
> ஆயச மாகவுந்தான் திரிந்திடாதே
> காமப்பேய் கொண்டவனோ டிணங்கிடாதே
> காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே."

என ஒரு பாடலில் நல்லறங்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளார்.

## பெருநூல் காவியம்

இவரது பெருநூல் காவியம் ஆயிரத்தில் கருவில் இருக்கும் குழந்தை ஆணா-பெண்ணா என்பதைக் கண்டறியும் முறை குறிக்கப்பட்டுள்ளது. கனாக்களின் தோற்றம் மற்றும் பயன் உரைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுச் சித்தர்கள் பலரின் பெயர்களும், அவர்களோடு இவருக்கு இருந்த தொடர்புகளும் இவர் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சித்தர்களுள் அகத்தியரை இவர் பெரிதாக மதிக்கிறார். மனத்தியல்பு நுட்பமாக விரித்துரைக்கப் பட்டுள்ளது. கருடன் இவரை நோக்கி எழுப்பிய வினாக்களும், இவர் தந்த விடைகளும் பெரும் சிறப்புக்குரியன.

*இவரது பெருநூல் காவியம் ஆயிரத்தில் கருவில் இருக்கும் குழந்தை ஆணா-பெண்ணா என்பதைக் கண்டறியும் முறை குறிக்கப்பட்டுள்ளது. கனாக்களின் தோற்றம் மற்றும் பயன் உரைக்கப்பட்டுள்ளது.*

## காகபுஜண்டர் ஆலயம்

காகபுஜண்டருக்கான ஆலயம் ஒன்று காரைக்காலை அடுத்த திருமலைராயன் பட்டினத்தில் நற்பலீயானந்த அம்பாஜீ என்ற காகபுஜண்டர் அருள் பெற்ற ஒருவரால் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் சிதம்பரத்தை அடுத்த ஆச்சாள்புரம் சிவாலயம் ஒன்றில் இவர் திருமேனி உள்ளது. நாடிசோதிடர் பலரும் காகபுஜண்டர் நாடியையே மூல நூலாகக் கொண்டு பலன் உரைத்து வருகின்றார்கள்.

(காகபுஜண்டரின் விரிவான வரலாறு-கட்டுரை ஆசிரியரால் ஆராய்ந்து எழுதப்பட்டு 217 பக்கங்கள் கொண்ட நூலாக 2001 இல் வெளியிடப்பட்டுள்ளது.)



www.saivamonline.com

## 4. பாம்பாட்டிச் சித்தர்

"நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே, நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே" என்று பாம்பை முன்னிலைப்படுத்தி ஆடுமாறு வேண்டிப்பாடிய ஒரு சித்தர் பெருமகனாரைத் தமிழ்நாட்டு மக்கள் "பாம்பாட்டிச் சித்தர்" என அழைத்தனர். பதினெண் சித்தர்கள் என்ற தொகுப்பில் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது. இவர் கார்த்திகைத் திங்கள் மிருக சீரிட விண்மீனில் பிறந்தார். இவர் பாண்டி நாட்டில் பிறந்து சட்டை முனியிடம் தீட்சை பெற்றவர். இவர் பிறந்த தலம் திருக்கோகரணம் என்பர். கொங்கு நாட்டிலுள்ள மருத மலையில் நெடுநாள்வாழ்ந்திருந்தார். அங்கே இவருக்கு நினைவிடங்கள் இன்றும் உள்ளன. சங்கரன் கோயிலில் அன்னை கோமதியை இவரே பிரதிஷ்டை செய்தார். சங்கரன் கோயிலில் கன்னி மூலையில் புளியங்குடி சாலையிலுள்ள புன்னை வனத்தில் இவர் நிருவிகர்ப்ப சமாதி கூடினார். இவர் இம்மண்ணுலகில் 123 ஆண்டு 4 நாள்கள் வாழ்ந்திருந்தார். பாம்பாட்டிச் சித்தர் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்.

### பாடல் அமைப்பு

பாம்பாட்டிச் சித்தரின் கொள்கைகளை அறிந்து கொள்ள அவர் பெயரில் வழங்கும் 129 தனிப்பாடல்களே துணையாக உள்ளன. ஞான சூத்திரம், பெரியஞானக் கோவை எனச் சிலர் அவர் பாடல்களை வகைமைப்படுத்தி உள்ளனர். அவர் பாடல்களைக் குருவணக்கம், சித்தர் வல்லபம், பொருளாசை விலக்கம், பெண்ணாசை விலக்கம், உடலின் குணம், அகப்பற்று நீக்கல் என்றெல்லாம் உள்தலைப்பிட்டுச் சிலர் பதிப்பித்துள்ளனர்.

இப்பகுப்பு மேலெழுந்தவாரியாகச் செய்யப்பட்டுள்ளது. இவர் பாடல்களில் அறிவுநிலை, உடல் நிலை, ஒருமைப்பாடு, சாதி பேதங்களைக் கண்டித்தல், செல்வம் நிலையாமை, இழிந்த காமத்தை வெறுத்தல், பேரின்ப வழிகாட்டல் என்பன சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### கொள்கைகள்

பாம்பாட்டிச் சித்தரின் கொள்கைகளில் குறிக்கத்தக்கன சில உள்ளன. சிவனே முழுமுதற்கடவுள். அவன் கூத்தனாகக் காட்சி



www.saivamonline.com

தருகிறான். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவன். அவனை அடையும் ஒரே மார்க்கம் அன்பு மார்க்கமே, அன்பு இல்லாதாருக்கு வீடு பேறு இல்லை. கோயில்வழிபாடு, திருத்தலயாத்திரை முதலியவற்றால் இறைவனை அடைய முடியும் என்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை. வேதம், சாத்திரம், தந்திரம், புராணம், ஆகமம் என்பன வீணானவை. உலகப் பற்றும் ஆசையும் ஒழிக்கப்படவேண்டுவன.

இவர்பாடல்கள் எளிய நடைகொண்டவை. சொல்நயம் மிக்கவை. எளிய உவமைகளால் அமைந்தவை. ஆழ்ந்த தத்துவச் செறிவு கொண்டவை. ஒவ்வொருவர் உடலின் உள்ளேயும் பாம்பு வடிவாக மண்டலித்துள்ள குண்டலினி என்னும் சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்ம தரிசனத்தைக் காண வைப்பதே இவர் நோக்கம். ஆடு பாம்பே என இவர் எழுப்புவது குண்டலினி என்னும் மகாசக்தியையேயாகும்.

*சிவனே முழுமுதற்கடவுள். அவன் கூத்தனாகக் காட்சி தருகிறான். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவன். அவனை அடையும் ஒரே மார்க்கம் அன்பு மார்க்கமே, அன்பு இல்லாதாருக்கு வீடு பேறு இல்லை.*

## சிவமும் - குருவும்

இறைவன் எல்லாப் பொருள்களிலும் இணைந்தே உடனாக நிற்கிறான் என்பதைப் பாம்பாட்டிச் சித்தர்

*"பொன்னில் ஒளிபோல எங்கும் பூரணமதாய்ப்*
*பூவின்மணம் போலத் தாங்கும் பொற்புடையதாய்*
*மன்னும்பல உயிர்களில் மன்னிப்பொருந்தும்*
*வள்ளல் அடி வணங்கிநன்று ஆடுபாம்பே"*

எனப் பாடுகின்றார். குருவின் துணைபெற்றே சிவன் தாள்மலரை அடைய முடியும் என்பது இவரது திடமான கொள்கை.

*"உள்ளங்கையில் கனிபோல உள்ளபொருளை*
*உண்மையுடன் காட்டவல்ல உண்மை குரு"*

என்றும்,

*"போதப் பொருள் இன்னதென்று போதனை செய்யும்*
*பூரண சற்குருதாள் கண்டு ஆடுபாம்பே"*

என்றும் குரு வழி பெறலாகும் ஞானம் இவரால் விளக்கப்படுகிறது.



www.saivamonline.com

## சித்தாடல் பதிவுகள்

சித்தர்கள், சிவனருளும், குருவருளும் கைவரப் பெற்றுச் சித்தாடல் நிகழ்த்திய அற்புதமானவர்கள். "எட்டு நாகம் தம்மைக் கையில் எடுத்தே ஆட்டுவோம்"; "ஏழுமலைகளைப் பந்தாய் எடுத்து எறிகுவோம்"; "செப்பரிய மூன்றுலகும் செம்பொன் ஆக்குவோம் செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்" என்பவை சில எடுத்துக்காட்டுகள். சித்தர்கள் நிகழ்த்தவல்ல சித்துக்கள் சிலவற்றை இவர் பின் வருமாறு பாடியுள்ளார்.

*"நடுவாக ஆதிசேடன் தன்னை நட்டும்*
*நான்கு திக்கும் மந்திரித்த நீறுதூவும்*
*கடுவிடம் கக்கலே அக்கட் செவிகளைக்*
*கையில் எடுத்து ஆடுங்கள் சித்தனாரே".*

மனமே, உலகியல் பொருள்கள் கூடவருவதில்லை. சிவன்பதம் நாடும் பழக்கத்தை மேற்கொள் என்று அறிவுறுத்துகின்றார். "நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம் வருவன்வரும் போது நாடிவருமோ?" எனவினாத் தொடுத்து, "கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ? கூத்தன்பதம் குறித்து நின்று ஆடுபாம்பே" எனச் சிவன் திருவடிகளில் நாட்டத்தை விதைக்கிறார். பெண்ணாசை இறை நினைவை அழிக்கும் என்பதை, "நெக்கு நெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில் நினைப்பார் நிமலனை நினையார் என்று ஆடுபாம்பே" என்று அடையாளப்படுத்துகிறார்.

## சீர்திருத்தவாதி

உடல் என்பது யாது? மரணத்துக்குப்பின் இதனால் ஒரு சிறுபயனும் இல்லை என்கிறார் சித்தர்.

*"ஊத்தைக்குழிதனிலே மண்ணை எடுத்தே*
*உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே*
*வாய்த்த குயவனார் அவர் பண்ணு பாண்டம்*
*வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே".*

புளியம்பழமும் அதன் ஓடும் போலச் சுற்றத் தொடர்புகளில் இருந்து நீங்கவேண்டும். அன்பற்றவனுக்கு வீடு பேறு என்பது என்றும் இல்லை. கள்ளப் புலன்களைக் கட்டறுத்தால் கால காலனைக் காணலாம். மூடர்களைவிட்டு அஞ்ஞானம் என்றும் நீங்காது. நிறைவாக,



www.saivamonline.com

"சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சகத்தோர்க்கே அல்லாது சற்சாதுக்களுக்கோ?
சமயத்தில் ஏறினபேர் சித்தம் மாறுமோ
சித்தர் சித்தாந்தம் தேர்ந்து ஆடுபாம்பே"

என்கிறார்.

***புளியம்பழமும் அதன் ஓடும் போலச் சுற்றத் தொடர்புகளில் இருந்து நீங்கவேண்டும். அன்பற்றவனுக்கு வீடு பேறு என்பது என்றும் இல்லை. கள்ளப் புலன்களைக் கட்டறுத்தால் கால காலனைக் காணலாம். மூடர்களைவிட்டு அஞ்ஞானம் என்றும் நீங்காது.***

பாம்பாட்டிச்சித்தர் சித்தர் சித்தாந்தம் தேடிக்காணப்பணிக்கிறார். ஒரு சீர்திருத்தவாதியாக நின்று,

"சாதிப் பிரிவிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியிலே கோலை நாட்டுவோம்"

எனச் சாதியத்தைச் சாடி மனிதகுல ஒருமைக்கு அழைப்பு விடுக்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

## 5. பட்டினத்தடிகள்

சைவத்திரு முறைகளுள் ஒன்றாகிய பதினொராம் திருமுறை 12 அருளாளர்களால் பாடப்பெற்ற 40 சிற்றிலக்கியங்களின் தொகுப்பாகும். பூம்புகாரை அடுத்த திருவெண்காட்டு இறைவர் திருநாமம் தாங்கிய திருவெண்காட்டு அடிகள் என்பவர் 12 அருளாளர்களுள் ஒருவர். கடற்கரை நகரங்களைப் பட்டினம் என்பது வழக்கு. பிற்காலத்தில் இவரைப் பட்டினத்தார் என்றும் பட்டினத்துப் பிள்ளையார் என்றும் பட்டினத்து அடிகள் என்றும் குறித்தனர்.

பதினொராம் திருமுறையில் திருவெண்காட்டு அடிகள் அருளியனவாக ஐந்து சிற்றிலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது என்பன அவை. பிறகாலத்தில் இவர் பெயரால் யாரோ சிலர் பாடிய பாடல்கள் பட்டினத்தார் பாடல்கள் என்ற



www.saivamonline.com

பெயரில் தனிப்பாடல் திரட்டில் இணைக்கப்பட்டுள்ளன. இவர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருந்தவர். தனிப்பாடல் திரட்டில் வரும் ஏகரித்து, ஒப்பார், ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, வேட்டி, வேலை மினக்கிட்டு போன்ற பிற்காலச் சொற்களின் ஒன்றுகூட திருவெண்காடர் பாடல்களில் காணப்படவில்லை.

***தனிப்பாடல் திரட்டில் வரும் ஏகரித்து, ஒப்பார், ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, வேட்டி, வேலை மினக்கிட்டு போன்ற பிற்காலச் சொற்களின் ஒன்றுகூட திருவெண்காடர் பாடல்களில் காணப்படவில்லை.***

பிற்காலத்து இயற்றப்பட்ட பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் இவர் வரலாறு பின்வருமாறு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர். சிவபக்தர். பெரும் பொருள் ஈட்டி வாழ்ந்தவர். திருவிடைமருதூர் இறைவன் மருதவாணர் என்னும் பிராமணச் சிறுவராகி - தம் அன்பர் சிவசருமர் என்பவரைத் தம்மைப் பட்டினத்தாரிடம் விற்றுப் பொருள் பெறுமாறு பணித்தார்.

மருததவாணரை விலைக்கு வாங்கிய பட்டினத்தார் அவரைத் தம் காதல் மகனாகவே வளர்த்து வணிகத்தில் பழக்கினார். வணிகத்தில் சிறந்த மருதவாணர் வெளிநாடு சென்று பொருளீட்டி, திருக்கோயில் பணிகளுக்கும், சிவனடியார்களுக்கும் வழங்கினார். எஞ்சிய பொருளுக்கு எரு மூட்டைகளை வாங்கிக் கொண்டு கப்பலில் தாயகம் திரும்பினார்.

கப்பல் கடலில் திசைமாறிய போது எரு மூட்டை வாங்கியமை பற்றி இகழ்ந்துரைத்த சக வணிகர்கள், சோறு சமைக்கப் பற்றுச்சீட்டு எழுதிக் கொடுத்து எரு மூட்டைகளைக் கடனாகப் பெற்றனர். பட்டினத்தார் ஒரு எரு மூட்டையை உடைக்க உள்ளே மாணிக்க மணிகள் இருந்தன. அடுப்பெரிக்கப் பயன்படுத்திய வணிகர்கள் அதைக் கண்டு மனம் வருந்தினர்.

பண ஆசைமிக்கவராய் எல்லா எரு மூட்டைகளையும் உடைத்த பட்டினத்தார், அவற்றுள் மாணிக்கக் கற்கள் இல்லாமையை கண்டு மருதவாணரைத் தண்டிக்கக் கருதித் தனி அறையில் பூட்டி வைத்தார். அன்புமிக்க, பட்டினத்தார் மனைவியார் அறையில் சென்று வளர்ப்பு



www.saivamonline.com

மகனைக் காண முற்பட்டபோது மருதவாணர் உமை, முருகனோடு சோமாஸ்கந்தராய் அவ்வம்மைக்குக் காட்சி தந்தார். மருதவாணர் பெருமை உணர்ந்து பணிந்த பட்டினத்தாருக்கு உலகப் பற்றுஅறப் பல உபதேசங்களைச் செய்தார் மருதவாணர்.

காதற்ற ஊசியை, இழை பிரித்த நூலுடன் பட்டுத் துணியில் மூடி, ஒரு பெட்டியில் வைத்து உமது கணவருக்கு உரிய பொருள் இதுவாகும்; கொடுப்பீர் எனக் கொடுத்து மறைந்தார். பட்டினத்தாருக்கு ஞானம் பிறந்தது. பற்றுகள் சிதறின.

*“பாரனைத்தும் பொய் எனவே*
*பட்டினத்துப் பிள்ளையைப் போல்*
*யாரும் துறத்தல் அரிது அரிது”*

என்கின்றார் தாயுமானவர்.

***நாடாளும் மன்னன் அவரைச் சந்தித்து,*** “நீர் துறவடைந்து பெற்ற பயன் யாது?” ***என வினவினான். நீ நிற்கிறாய்; யான் அமர்ந்திருக்கிறேன்; இதுவே பயன் என்றார் பட்டினத்தார். மன்னன் தாழ்ந்தான்.***

தமது மாளிகையைத் துறந்து ஊரம்பலம் சேர்ந்தார் பட்டினத்தார். நாடாளும் மன்னன் அவரைச் சந்தித்து, “நீர் துறவடைந்து பெற்ற பயன் யாது?” என வினவினான். நீ நிற்கிறாய்; யான் அமர்ந்திருக்கிறேன்; இதுவே பயன் என்றார் பட்டினத்தார். மன்னன் தாழ்ந்தான். பல இல்லங்களிலும் இவர் பிச்சை ஏற்று உண்பதைக் கண்டு அவமானமடைந்த உறவினர் அவர் தமக்கை வழி நஞ்சு கலந்த அப்பத்தை அவருக்கு உண்ணக் கொடுத்தனர்.

“தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்” எனக்கூறி, அவ்வப்பத்தை இறப்பிற் செருகினார். வீடு தீப்பற்றி எரிந்தது. அன்னை இறந்த பொழுது சில பாடல்கள் பாடி அவர் சிதைக்குத் தீ மூட்டினார். தல யாத்திரை மேற்கொண்டு அருட் பனுவல்களைப் பாடிப் பரவினார். இவர் தலைமைக் கணக்கர் சேந்தனாரை மன்னன் சிறைப்பிடித்த போது “மத்தளைத் தயிருண்டானும்” என்ற பாடலைப் பாடச் சிவ கணங்கள் அவரைச் சிறை மீட்டுப் பிள்ளையார் முன் நிறுத்தினர்.

தில்லையில் அன்னை சிவகாமி உணவளித்து அவர் பசி நீக்கி அருளினாள். திருவொற்றியூரில் சிறுவர்களுடன் ஒரு மணற்குன்றில்



www.saivamonline.com

மறைந்து மற்றொன்றில் வெளிப்பட்டு வியப்பூட்டினார். நிறைவாகச் சிறுவர்களை அழைத்துத் தம்மை மணலால் மூடச் சொன்னார். பின் வெளிப்படவே இல்லை. மணலை அகற்றிப் பார்க்கச் சிவலிங்கமாகக் காட்சி தந்தார். பத்ரகிரியாரை இவர் நண்பர் என்று தொடர்புபடுத்திக் கதைகள் கூறப்படுகின்றன.

*இவர் பெயரால் பிற்காலத்தில் பாடப்பெற்ற தனிப்பாடல்கள் பொருட்சிறப்பு நிறைந்தனவாய் நிலையாமை கூறி சாதி பேதங்களைக் கடிந்து நிற்கின்றன. அவை தனியே ஆராயத்தக்க சிறப்பு மிக்கன.*

பேய்க்கரும்பு ஒன்று தித்திக்கும் இடமே நின்முத்தித்தலம் என்று சிவன் வழங்கியதாகவும் கதை உண்டு. பட்டினத்தாருக்கும் திருவண்ணாமலை தாசி ஒருவருக்கும் பிறந்தவரே அருணகிரி என்று கதை கட்டியவர்களும் உளர். இவர் பெயரால் பிற்காலத்தில் பாடப்பெற்ற தனிப்பாடல்கள் பொருட்சிறப்பு நிறைந்தனவாய் நிலையாமை கூறிச் சாதி பேதங்களைக் கடிந்து நிற்கின்றன. அவை தனியே ஆராயத்தக்க சிறப்பு மிக்கன.

*"ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார்*
*பத்ரகிரி பண்புரைப்ப தெந்நாளோ!"* - தாயுமானவர்.

## 6. பத்ரகிரியார்

தமிழ்நாட்டுச் சித்தர் வரலாற்றில் பத்ரகிரியாருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு, பட்டினத்தாரையே ஞானகுருவாகக் கொண்டு அவருக்கும் முன்னாகவே சிவனடி எய்தினார். பத்ரகிரியார் பாடிய மெய்ஞ்ஞானப்புலம்பல் தமிழில் பெரிதும் சிறப்புற்று விளங்குகின்றது. துளுவநாட்டின் மாமன்னர் பத்ரகிரியார். உஞ்சேனை என்று குறிக்கப்படும் உஜ்ஜைனியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். சிறந்த சிவ பக்தர். இத்தலத்தில் அமைந்துள்ள சிவாலயம் மாகாளேஸ்வரம் எனப்படும். இத்தலம் பற்றிய விரிவான செய்திகள் துளசிராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன.

பட்டினத்தடிகள் தம் தாய் மறைந்தபிறகு அவருக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை இயற்றிவிட்டுப் பாரத நாடெங்கும் தல யாத்திரை மேற் கொண்டார். உஞ்சேனை வந்து மாகாளரை வணங்கிவிட்டு, ஊருக்கு வெளியே தனியிடத்தில் இருந்த காட்டுப் பிள்ளையார் கோயில் சந்நிதியில் நிட்டை கூடித்தியானத்தில்



www.saivamonline.com

அமர்ந்திருந்தார்.

ஓரிரவு பத்ரகிரியார் அரண்மனையில் கொள்ளை அடித்துத் திரும்பும் கள்வர்களுள் ஒருவன், காணிக்கையாக ஒரு முத்துமாலையைக் காட்டுப்பிள்ளையார் மீது வீச அது நிட்டையில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகள் கழுத்தில் வந்து வீழ்ந்தது. பட்டினத்தார் நிட்டையில் இருந்ததால் அதை உணர்ந்திலர். கள்வர்களைத் தேடிவந்த பத்ரிகிரி மன்னனின் சேவகர்கள், அரசனுக்குச் சொந்தமான முத்து மாலையோடு அமர்ந்திருக்கும் பட்டினத்தடிகளைக் கள்வர் எனக்கருதிச் சிறைப் பிடித்து மன்னர் முன் கொண்டு போய் நிறுத்தனர். மன்னன் பட்டினத்தாரைக் கழுவிலேற்ற ஆணையிட்டான்.. கழுமரத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்கக் காவலர்கள் முயன்ற போது பட்டினத்தார் சிவனை நினைத்து,

*"என் செயல் ஆவது ஒன்றுமில்லை இனித் தெய்வமே*
*உன் செயலே என்று உணரப் பெற்றேன்"*

என்று பாடினார். கழுமரம் தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்று. பத்ரகிரியார் இதைக் கண்டு வியந்து தவத்தின் பெருமை உணர்ந்து அரசபோகங்களை எல்லாம் துறந்தார். துறவு பூண்டு பட்டினத்தடிகளையே ஞானகுருவாகக் கொண்டு அவருடன் தலயாத்திரை மேற்கொண்டார்.

பட்டினத்தார், பத்ரகிரியாரைத் திருவிடைமருதூர் செல்லுமாறு பணித்தார். பத்ரகிரியார் திருவிடைமருதூர்ச் சேர்ந்து, சிவனை வழிபட்டு மேற்குக் கோபுர வாசலில் அமர்ந்து பிச்சை ஏற்றுத் தாமும் உண்டு, தம் குருநாதருக்கும் வழங்கி வாழ்ந்திருந்தார். ஒரு நாள் பத்ரகிரியார் பிச்சை ஏற்றுக் குருவுக்கு வழங்கித் தானும் உண்டிருந்த போது, ஒரு பெட்டை நாய் அவர் அருகே வந்து நின்று வாலை ஆட்டியது. அவர் அதற்கு எஞ்சிய உணவை இட, அது அவரை ஒட்டிக் கொண்டு நன்றி பாராட்டித் தொடர்ந்தது.

சிவபெருமான் ஒரு நாள் முனிவர் வேடத்தில் திருவிடைமருதூர் ஆலயக் கிழக்கு வாசலில் அமர்ந்திருந்த பட்டினத்தடிகளிடம் சென்று "ஐயா என் பசிக்கு அன்னமிடுவீர்" என்று வேண்டி நின்றார். பட்டினத்தார், "நானோ கோவணம் கூட மிகை என்று கருதி வாழ்பவன். என்னிடம் சோறு ஏது? மேற்குக் கோபுர வாசலில் ஒரு சம்சாரி வாழ்கிறான்; அவனிடம் சென்று கேளும்" என்று நகையாடிக் கூறினார். (சோற்றுச் சட்டி என்ற ஒரு பொருளின் மேல் பற்றும் - நாய் மீது பாசமும் கொண்டிருந்த பத்ரகிரியாருக்குப் பூரணத் துறவு சித்திக்கவில்லை என்பதால் அவரைச்



www.saivamonline.com

சம்சாரி என்றார்).

சிவமுனிவர் பத்ரகிரியாரிடம் கை நீட்ட, உண்மை உணர்ந்த அவர் தம் குருநாதரின் உள்ளக் கருத்தறிந்து சோற்றுச் சட்டியை நாய் மீது போட்டு உடைக்கச் சட்டியும் உடைந்தது; நாயும் மாண்டது. ஞானியர் எச்சில் உண்ட புண்ணியப் பேற்றால் அப்பெண்நாய் காசிராஜன் மகளாகப் பிறந்தது. பற்றுக்கள் யாவையும் துறந்த பத்ரகிரியார் "மெய்ஞ்ஞானப் புலம்பல்" முதலிய பாடல்களைப் பாடியும், நிட்டை கூடியும் வாழ்ந்திருந்தார்.

காசிராஜன் மகள் மணப்பருவம் எய்த மன்னன் திருமண ஏற்பாடு செய்தான். மறுத்த அப்பெண் "நான் எவருக்கும் உரியவள் அல்லள். திருவிடைமருதூரில் இருக்கும் என் குருநாதரிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பியுங்கள்" என்று உறுதிப்படக் கூறினாள். காசிராஜன் தன் மகளைப் பத்ரகிரியார் முன் கொண்டு சேர்த்தான். அவள் பத்ரகிரியாரைப் பார்த்துத் தம் பழம்பிறப்பு உணர்த்தி, அடிநாய் மீண்டும் உங்களை நாடி வந்திருக்கிறேன் என்று கூறிப் பணிந்தாள். பத்ரகிரியார் அவளைப் பட்டினத்தாரிடம் கொண்டு சென்று "குருவே-உம் எச்சில் உண்ட இந்நாய்க்குப் பிறவி நோய் எவ்வாறு வந்தது?" என்று வினவிப் பணிந்தார்.

---

***பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல் காப்பு ஒன்றும், 232 கண்ணிகளும் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கண்ணியும் எக்காலம்? என்று நிறைவுறுவதால் இதனை எக்காலக் கண்ணி என்று கூறுதல் வழக்கு.***

---

பட்டினத்தார் மருதீசர் திருவருளைச் சிந்தித்தார். உடனே ஒரு பெரும் ஜோதி தோன்றிற்று. அதில் அப்பெண்ணும், பத்ரகிரியாரும் புகுந்து மறைந்தனர். இருவரும் முத்தி பெற்றனர். பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல் காப்பு ஒன்றும், 232 கண்ணிகளும் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கண்ணியும் எக்காலம்? என்று நிறைவுறுவதால் இதனை எக்காலக் கண்ணி என்று கூறுதல் வழக்கு. சிவனருள் நாட்டம், உலக நிலையாமை, பற்று அற வேண்டுதல், துறவின் சிறப்பு, குருவின் பெருமை முதலியன இக்கண்ணிகளிலே நிறையப் பேசப்பட்டுள்ளன. முத்தி தரும் ஞானமொழியாம் புலம்பல் என்று உரைக்கும் காப்புக் கொண்டு இந்நூல் வீடு பேற்றின் வாயில் என்பதை உணர முடிகிறது. தாயுமானாரின் கண்ணிகளுக்குப் பத்ரகிரியார் முன்மாதிரியாகத் தெரிகிறார்.



www.saivamonline.com

*"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்*
*தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?"*

அந்தக் கரணங்களுள் ஒன்றாகிய ஆங்காரத்தைக் கட்டுக்குள் வைத்து ஐம்புல ஆசைகளையும் எரித்தால் மோனம் தித்திக்கும் என்கிறது கண்ணி. நான் என்ற தன் முனைப்பை வாழும் காலத்தில் விட்டொழித்தால் மறுபிறவி இல்லை என்பதை,

*"ஊன் நிறைந்த காயம் உயிர் இழந்து போகுமுன்னம்*
*நான் இறந்து போக இனி நாள் வருவது எக்காலம்?"*

உள்ளத்தேடலில்தான் இறைக்காட்சி சித்திக்கும் என்பதை,

*"உள்ளம் அறியாது ஒளித்திருந்த நாயகனைக்*
*கள்ள மனம் தெளிந்து காண்பதினி எக்காலம்?"*

என்கிறார். உலகப் பற்றுக்களைத் தகர்க்க ஒரு வழிகாட்டுவார் போல,

*"மனதை ஒரு வில்லாக்கி வான் பொறியை நாணாக்கி*
*எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?"*

என நயம்படப் பேசுகிறார். நுட்பமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று பத்ரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல். வாய்ப்பு அமையும் போது அதனை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தலாம். இந்நூல் சிவஞானக் கருவூலம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## 7. சிவவாக்கியர்

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் குறிக்கத் தக்க பெருஞ்சிறப்புடைய ஒருவர் சிவவாக்கியர். அன்னை வயிற்றிலிருந்து உலகில் வந்துதித்த உடனேயே சிவ என்ற நாமத்தை உச்சரித்தவர் இவர். உலகம் அந்த மகாவாக்கியத்திற்குச் சொந்தக்காரர் என்ற பொருளில் இவரைச் சிவவாக்கியர் என்று அழைக்கலாயிற்று. இவர் அவ்வப்போது அருளிய ஞானக் கருவூலங்கள் திரட்டப்பட்டுச் சிவவாக்கியம் என்று பெயர் சூட்டப்பெற்றன.

---

*இன்று சிவவாக்கியத் தொகுப்பில் 524 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எல்லாம் தேன்பிலிற்றும் தத்துவக் கவிதைகள். அழகுணர்ச்சி மிக்க சிவனருட் செல்வங்கள். பிரமிப்பூட்டும் பூடகப் புதிர்கள்.*

---



www.saivamonline.com

இன்று சிவவாக்கியத் தொகுப்பில் 524 பாடல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எல்லாம் தேன்பிலிற்றும் தத்துவக் கவிதைகள். அழகுணர்ச்சி மிக்க சிவனருட் செல்வங்கள். பிரமிப்பூட்டும் பூடகப் புதிர்கள். சிவவாக்கியர் வேதியர் குலத்தவராகத் தெரிகிறார். எங்கே பிறந்தார்? பெற்றோர் யார்? காலம் யாதென்பன ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் தமிழ் நாட்டுக்காரர். தமிழர், தமிழ்ச்சித்தர். சிவநெறி நின்றவர் என்பதில் குழப்பம் ஏதுமில்லை.

ஒருமுறை இவர் தமிழ்நாட்டிலிருந்து காசியாத்திரை மேற்கொண்டார். பிரம்மச்சாரி ஆயினும் இல்லறநாட்டம் இருந்தது. வழியில் சித்தர் ஒருவரைச் சந்தித்தார். அவரோ செருப்புத்தைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். வாய்பேசாத அச்சித்தர்பெருமான் சிவவாக்கியருக்குச் சில காசுகள் வழங்கி, ஓர் உண்ண உதவாத பேய்ச் சுரைக்காய் ஒன்றையும் வழங்கினார். இவை எதற்கு என்று சிவவாக்கியர் வினவினார். "போ! போகும் வழியில் மணலைச் சோறாகச் சமைத்து இப்பேய்ச் சுரைக்காயைக் கைப்பின்றிச் சமைத்துப் பரிமாறும் பெண் ஒருத்தி எதிர்படுவாள். அவள் நினக்கு மனைவியாவாள்" என்றார் ஞானகுரு.

***இல்லறத்தில் வாழ்ந்திருந்து, மிக்க காமவேட்கை தீர்ந்தபின் துறப்பதே துறவு என்பது தொல்காப்பியம். இளமையிலேயே துறவு மேற்கொள்வதை வள்ளுவரும் ஏற்கவில்லை. இல்லறமே ஏற்காத ஒருவர் எதனைத் துறந்தார் என்று இவரைத் துறவி என்கிறீர்கள் என்று நிகழ்காலக் கவிஞர் ஒருவர் வினா எழுப்புகிறார்.***

வழியில் இவர் கண்ட பெண்கள் எவரும் குருநாதர் குறித்த ஆற்றல்களைப் பெற்றிருக்கவில்லை. கடைசியாக ஒரு குறக்குலப் பெண் எதிர்பட்டாள். சிவவாக்கியர் வாட்டம் கண்டு அவள் வினாத் தொடுத்தாள். சித்தர் தம் கவலை கூற, அக்குறவஞ்சி மணற்சோறாக்கிக் கைப்பின்றிப் பேய்ச்சுரையைக் கறியாக்கி அமுது படைத்தாள். குருப்பிரசாதம் என உணர்ந்து அக்குறமகளையே சிவவாக்கியர் மணந்து கொண்டு சிலகாலம் இல்லறத்தில் இருந்து இறுதியில் துறவு பூண்டார்.

இல்லறத்தில் வாழ்ந்திருந்து, மிக்க காமவேட்கை தீர்ந்தபின் துறப்பதே துறவு என்பது தொல்காப்பியம். இளமையிலேயே துறவு மேற்கொள்வதை வள்ளுவரும் ஏற்கவில்லை. இல்லறமே ஏற்காத ஒருவர் எதனைத் துறந்தார் என்று இவரைத் துறவி என்கிறீர்கள் என்று நிகழ்காலக்



www.saivamonline.com

கவிஞர் ஒருவர் வினா எழுப்புகிறார். சித்தர்களில் ஒருவராகிய கொங்கணரோடு இவருக்கு நட்பு இருந்தது. இவர் உலகப்பற்று நீங்கக் கொங்கணரே துணை நின்றார் என்று தெரிகிறது.

*சிவவாக்கியர் கவிதைகளில் சத்தியமும் ஞானமும் பூத்துக் குலுங்குகின்றன. சித்தம் போக்கு சிவம் போக்கு என்பது பழமொழி. சித்தர் பலரும் சிவநெறி நின்றவர்கள் தாம். அருளாளர்கள் சடங்காசாரங்களை ஏற்றுப் போற்றினர். ஆயினும் சித்தர்கள் சமய சீர்திருத்தவாதிகளாகச் சடங்குகள் இல்லாத சமயம் ஒன்றை முன் வைத்தனர்.*

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசை ஆழ்வார் இவரே என்பர் சிலர். இதனை உறுதிப்படுத்த இயலவில்லை. எல்லாம் செவிவழிச் செய்திகள் தாம். வரலாற்றில் பொய்மையும் கற்பனைவும் இருக்கலாம். ஆனால் சிவவாக்கியர் கவிதைகளில் சத்தியமும் ஞானமும் பூத்துக் குலுங்குகின்றன. சித்தம் போக்கு சிவம் போக்கு என்பது பழமொழி. சித்தர் பலரும் சிவநெறி நின்றவர்கள் தாம். அருளாளர்கள் சடங்காசாரங்களை ஏற்றுப் போற்றினர். ஆயினும் சித்தர்கள் சமய சீர்திருத்தவாதிகளாகச் சடங்குகள் இல்லாத சமயம் ஒன்றை முன் வைத்தனர்.

சமயச் சடங்குகளுக்கு எதிரான மிகப் பெரிய மௌனப் போராட்டம் சிவவாக்கியத்தில் ஓங்கி ஒலிக்கிறது. செய்தொழில் பற்றி வந்த சாதியக் குறியீடுகள் தகர்க்கப்பட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவர் சிவவாக்கியர். சந்தம் கொழிக்கும் அற்புதமான கவிதைகள். புரட்சிகரமான எண்ணக் குவியல்கள். சிவனே பெருந்தெய்வம். ஒரே தெய்வமும் கூட. நமச்சிவாயம் என்பதே மகாமந்திரம்.

"அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறு தேவர் அன்றுரைத்த மந்திரம்"

என்கிறார் அவர். திருமூலரை உள்வாங்கிக் கொண்டு புதிய கோணத்தில் வழிமொழிந்தவர் சிவவாக்கியர்.

"ஆனஅஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனஅஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனஅஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனஅஞ் செழுத்துளே அடங்கலாவ துற்றதே"



www.saivamonline.com

இதில் திருமந்திரம் நிழலாடுவது தெரிகிறது. உள்ளத்தின் உள்ளே ஒளிபூத்து நிற்கும் ஒளி வடிவானவன் சிவன். அவனை எங்கெங்கோ சென்று தேடித் திரியும் அறிவிலிகளை இவர் ஏளனம் செய்கிறார். அது குறித்த அழகிய சந்தக் கவிதை பின்வருமாறு,

"ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே ".

தெள்ளத் தெளிந்தாருக்கு மட்டும்தான் சீவனே சிவலிங்கம் என்பது தெரியவரும்.

---

*சாதீயக் கட்டுடைப்பதிலே சிவவாக்கியர் தீவிரமான ஒரு போராட்டத்தை நிகழ்த்தியிருக்கிறார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் மெல்ல உரைத்த சமத்துவத்தைச் சித்தர் உரக்க உரைத்து வியப்பூட்டுகிறார்.*

---

சிவநாமத்துக்கு இணையாக ராமநாமச் சிறப்பும் இவர்கவிதைகளிலே காணப்படுகின்றன.

"அந்திமாலை உச்சிமூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்பணங்களும் தபங்களும் செபங்களும்
சிந்தைமேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே".

ஓர் எல்லை உடைந்துவிட்ட நிலையில் பேதா பேதங்கள் நொறுங்கிப்போகும் என்பது புலனாகிறது. இத்தகு கவிதைகளில் ஆழ்வார் நிழலாட்டம் காணப்படுவதை உணர இயல்கிறது. சாதீயக் கட்டுடைப்பதிலே சிவவாக்கியர் தீவிரமான ஒரு போராட்டத்தை நிகழ்த்தியிருக்கிறார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் மெல்ல உரைத்த சமத்துவத்தைச் சித்தர் உரக்க உரைத்து வியப்பூட்டுகிறார். உவமைகள் வினாக்களிலே கோபக்கனல் கொப்பளிக்கிறது.

"பறைச்சியாவ தேதடா? பணத்தியாவ தேதடா?
இறைச்சிதோல் எலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ?"

இவள் பறையர் குலப்பெண். இவள் பார்ப்பன மகள் என்று இறைச்சி, தோல், எலும்பு எங்காவது முத்திரை குத்தப்பட்டுள்ளதா? எனவினவுகிறார்.



www.saivamonline.com

*"பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ?"*

நன்கு யோசித்தால் இந்தப் பேதங்கள் யாவும் மாயை என்பது உன் உள்ளத்திற்கே தெரிய வருமே.

*"பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே!"*

சாதியக் கட்டுடைக்கும் சாட்டை அடிகளாக இவர் கவிதைகள் ஆத்திர வடிவம் பூண்டு தகிக்கின்றன.

***உள்ளத்தில் தெய்வமிருப்பதால் உருவ வழிபாட்டை இவர் ஏற்கவில்லை. தலயாத்திரைகள் கூட வேண்டாமே என்கிறார். மதவாதத்தைக் கடுமையாகச் சாடுகிறார். வேத மந்திரம், சாதி ஆசாரம், என்பனவற்றை ஏற்க மறுக்கிறார். ஒன்றே குலம், ஒருவனே தேவன், உள்ளமே கோயில் என்று சாதிக்கிறார்.***

உள்ளத்தில் தெய்வமிருப்பதால் உருவ வழிபாட்டை இவர் ஏற்கவில்லை. தலயாத்திரைகள் கூட வேண்டாமே என்கிறார். மதவாதத்தைக் கடுமையாகச் சாடுகிறார். வேத மந்திரம், சாதி ஆசாரம், என்பனவற்றை ஏற்க மறுக்கிறார். ஒன்றே குலம், ஒருவனே தேவன், உள்ளமே கோயில் என்று சாதிக்கிறார்.

*"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே*
*சுற்றிவந்து முணமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா?*
*நட்டகல்லும் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்*
*சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"*

உருவ வழிபாடு கடந்த உள்ள வழிபாட்டுக்கு அறை கூவல் விடுக்கிறார் சிவவாக்கியர். சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ என்ற வினா ஆயிரம் அர்த்தங்கள் கொண்டது. விரிப்பின் பெருகும். நிறைவாகச் சிகரத்தை முன்னும் பின்னும் வைத்துச் செபிக்கும். சிவாயவசி என்ற மந்திர ரகசியம் அறிந்து உய்யலாம்.

*"சிவாயவசி என்னவும் செபிக்க இச்சகமெலாம்*
*சிவாயவசி என்னவும் செபிப்பயாவும் சித்தியாம்*
*சிவாயவசி என்னவும் செபிக்கவானம் ஆளலாம்*
*சிவாயவசி என்பதே இருதலைத்து ஆகுமே."*



www.saivamonline.com

# 8. இடைக்காடர்

யானை மேய்ப்பாரைப் பாகர் என்றும், ஆடு, மாடுகள் மேய்ப்பாரை இடையர் என்றும் கூறுதல் தமிழ் மரபு. இடையர்களைக் கோனார் என்றல் கிராமவழக்கு. காட்டுப் பகுதிகளில் ஆடு, மாடுகளை மேய்க்கும் அன்னாரை முன்னிலைப் படுத்திக் கோனாரே என்று விளித்துப் பாடும் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் இடைக்காட்டுச் சித்தர். காடன், மாடன் எனப் பெயர் வைத்தல் பண்டைய மரபு. இவரும் இடையர் மரபில் வந்தவராகலாம். அது பற்றி இவர் இடைக்காடர் என வழங்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. இடைச்சேரி, இடையூர் என்பன போல இடைக்காடு என்னும் ஊரினராதல் பற்றியும் இப்பெயர் அமைந்திருத்தல் கூடும்.

இவர் கொங்கணச் சித்தரின் சீடர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரின் வேறாகக் கடைச்சங்க காலத்தில் ஓர் இடைக்காடர் வாழ்ந்திருந்தார். திருவிளையாடல் புராணத்தில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் என்ற ஒன்றும் வருகிறது. தொண்டை மண்டலச் சதகம் இவர் வரலாறு குறித்துச் சில செய்திகளைத் தருகின்றது. அந்நூல் இவர் கொற்றலை ஊரில் வாழ்ந்திருந்தவர் என்றும் சிவன் அருள் பெற்ற சித்தர் என்றும் குறித்துள்ளது.

அபிதான சிந்தாமணி இவர் வரலாறு குறித்த சில செய்திகளை வழங்குகின்றது. இவர் தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டிலிருந்த இடையர். பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்திருக்கையில் நவ சித்தரில் ஒருவர் வந்து இவரிடம் பால் தருமாறு வேண்டினார். இவரும் ஆட்டுப்பால் வழங்கி உபசரிக்கச் சித்தர் இவருக்கு ஞானோபதேசம் செய்தார். அதனால் சித்தாடல் கைவரப் பெற்று இவர் இடைக்காட்டுச் சித்தராக உயர்ந்தார்.

அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் மழை இன்றி நாடு பஞ்சத்தில் துன்புறப் போவதை இடைக்காட்டுச் சித்தர் தம் தொலை நோக்கால் உணர்ந்தார். தம் ஆடுகளுக்குப் பஞ்சகாலத்திலும் தழைத்திருக்கத் தகும் எருக்கின் இலைகளை உண்ணப் பழக்கினார். காடுகளில் கிடைக்கும் பல ஆண்டுகள் கெடாத குருவரகு என்னும் தானியத்தை மண்ணோடு கலந்து சேறாக்கிச் சுவர் வைத்துக் குடிசை ஒன்றை அமைத்தார். பஞ்சகாலம் வந்தது. ஆடுகள் எருக்கிலை தின்பதால் ஏற்பட்ட ஊறலால் தம் உடம்பைக் குடிசையின் சுவரில் உராய்ந்தன. அப்போது மண்ணோடு கலந்திருந்த குருவரகு தானிய மணிகள் சில கீழே சிந்தின. அவற்றை மட்டும் உண்டு



www.saivamonline.com

இவர் வாழ்ந்திருந்தார். இவரும் இவர் ஆடுகளும் பஞ்சகாலத்தில் உயிர் வாழ்ந்திருப்பது அறிந்து வியந்த நவ கோள்களும் இவரைக் காண வந்தனர்.

இடைக்காட்டுச் சித்தர் அவர்களை அன்புடன் வரவேற்றார். குருவரகைப் பாகஞ் செய்து ஆட்டுப் பாலுடன் கலந்து வழங்கி நவக்கிரக நாயகர்களை மகிழ்வித்தார். உண்ட மயக்கத்தில் அவர்கள் கண்மயங்கி உறங்கினர். அந்த நேரத்தைப் பயன் கொண்டு, ஒன்றுடன் ஒன்று மாறு கொண்டு உலகத்தை வருத்திய நவக் கிரகங்களை மழை பெய்வதற்கு ஏதுவாக இவர் இடமாற்றம் செய்தார். மழை பொழிந்து நாடு மகிழ்ந்தது.

இவர் சாரீரம் என்னும் வைத்தியநூல் ஒன்றை இயற்றினார். இவரைப் போகர் மாணாக்கருள் ஒருவர் என்றும் மதுரைக்குக் கிழக்கேயுள்ள இடைக்காட்டினர் என்றும் விவேகசிந்தாமணி குறிப்புக்கள்

***இடைக்காட்டுச் சித்தர் பாடியனவாகச் சித்தர் பாடல்கள் தொகுப்பில் இன்று 130 பாடல்களும் ஒரு காப்புச் செய்யுளும் காணப்படுகின்றன. வழக்குச் சொற்களும் வட்டாரச் சொற்களும் கலவாத நல்ல இலக்கிய நடையில் இவர் பாடல்கள் அமைந்துள்ளன***

வழங்குகின்றன. கர்ணபரம்பரைச் செய்தி ஒன்று இவரை விஷ்ணு அம்சம் கொண்டவர் என்கிறது. ஒரு முறை இவரிடம் சித்தர் சிலர் வந்து விஷ்ணுவின் தசாவதாரத்தில் வணங்கத் தக்கவை எவை என வினவினார். இவர் நயமுற ஏழை இடையன் இளிச்சவாயன் எனக் கூறினார் என்பர். இடைக்காட்டுச் சித்தர் பாடியனவாகச் சித்தர் பாடல்கள் தொகுப்பில் இன்று 130 பாடல்களும் ஒரு காப்புச் செய்யுளும் காணப்படுகின்றன. வழக்குச் சொற்களும் வட்டாரச் சொற்களும் கலவாத நல்ல இலக்கிய நடையில் இவர் பாடல்கள் அமைந்துள்ளன. பதிப்பாசிரியர் தங்களுக்குத் தோன்றியவாறு உள் தலைப்புக்களிட்டுப் பிரித்து இவர் பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். காப்புச் செய்யுள் பொதுப்பட இறைமைக் குணம் பேசி அமைந்துள்ளது.

> *"ஆதி அந்தம் இல்லாதவன் ஆதியைத்*
> *தீது கூறும் பவம் தீப்படு பஞ்சு போல்*
> *மோதுறும்படி முப்பொறி ஒத்துறக்*
> *காதல் ஆகக் கருத்திற் கருதுவோம்"*



www.saivamonline.com

***இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் நன்கு ஆராயப்பட வேண்டிய நுட்பங்கள் கொண்டவை. சைவ - வைணவப் பனுவல்கள் ஆராயப்பட்ட அளவிற்குச் சித்தர் பாடல்கள் அறிஞர்களால் ஆராயப்படாமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை. ஏதேனும் ஒரு பின்புலம் இல்லை என்றால் சிலவகை இலக்கியங்களுக்கு வாழ்வு இல்லை என்றே தோன்றுகின்றது.***

இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் நன்கு ஆராயப்பட வேண்டிய நுட்பங்கள் கொண்டவை. சைவ - வைணவப் பனுவல்கள் ஆராயப்பட்ட அளவிற்குச் சித்தர் பாடல்கள் அறிஞர்களால் ஆராயப்படாமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை. ஏதேனும் ஒரு பின்புலம் இல்லை என்றால் சிலவகை இலக்கியங்களுக்கு வாழ்வு இல்லை என்றே தோன்றுகின்றது.

*"தாம் திமிதிமி தந்தக் கோனாரே*
*தீம்திமிதிமிதிந்தக் கோனாரே*
*ஆனந்தக் கோனாரே - அருள்*
*ஆனந்தக் கோனாரே!"*

நின்று ஆனந்தக் கூத்தாடும் தந்தங்களை உடைய நர்த்தன விநாயகரைக் கோன் தலைவனாகக் கண்டு, அவனிடம் நிறைந்திருக்கும் நிரந்தர மகிழ்ச்சியைத் தமக்கும் அருளுமாறு சித்தர் வேண்டித் தொடங்குவது புலனாகிறது. மகிழ்ச்சி தரும் தலைவன் என்ற பொருளில் ஆனந்தக் கோன் என்ற தொடர் அமைகிறது. விளிக்கும் போது ஆனந்தக் கோனாரே என நீண்டுள்ளது.

சித்தம் போக்குச் சிவன் போக்கு என்பார்கள். பாடல்கள் பலவும் சிவனாரை முன்னிலைப் படுத்தியே அமைந்துள்ளன. தில்லையில் நடனமிடும் ஆனந்தக் கூத்தனை இவர் தாண்டவக்கோன் எனக் குறிப்பிடுகிறார். வீடு பேற்றுக்குரிய எளிய வழிகளை இவர் பாடல்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. ஒன்றிரண்டைக் காணலாம்.

*"மனம் என்னும் மாடு அடங்கில் தாண்டவக்*
*கோனே! முத்தி*
*வாய்த்தது என்று எண்ணேடா தாண்டவக் கோனே"*

மனத்தைப் பக்குவப்படுத்ததுவதே முத்திக்கு வாயில் என்கிறார் சித்தர். மனத்தை மாடு என உருவகம் செய்த இடைக்காடர் சினத்தைப் பாம்பு என்று நாட்டுகிறார்.

*சினம் என்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே-யாவும்*
*சித்தி என்றே நினையேடா தாண்டவக் கோனே"*

இவை போல ஆசையை இவர் பசு என்கிறார்.



www.saivamonline.com

## 9. கடுவெளிச் சித்தர்

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் ஒருவராகத் திகழ்பவர் கடுவெளிச் சித்தர். பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள் என்ற பட்டியல்களில் கடுவெளிச் சித்தர் இடம் பெற்றிலர். மேற்குறித்த இரண்டு தொகைச் சுட்டுக்களும் உருவானதற்குப் பிற்பட்ட காலத்தவராக இவர் இருந்திருக்க வேண்டும்.

சித்தர் வரலாறு அறியாத தமிழ் மக்களில் பலரும்,

*நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்*
*கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி*

என்ற பாடலை அறிந்தேயுள்ளனர். யாதும் ஊரே யாவரும் கேளிர், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் முதலாகிய பல தொடர்களை அறிந்திருக்கும் தமிழர்கள் அவை முறையே கணியன் பூங்குன்றனாரும், திருமூல நாயனாரும் வழங்கிய கொடைகள் என்பதை அறியார். மேற்குறித்த நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்று தொடங்குவன முதலாய 34 கண்ணிகளாக அமைந்த ஆனந்த களிப்பை வழங்கிய சித்தர் பெருமான் கடுவெளிச் சித்தர் ஆவார்.

அகன்று-பரந்து விரிந்த வான்வெளியைப் பரவெளி என்று குறித்தல் சமய மரபு. மன, வாக்குக்களுக்கு எட்டாதது பரவெளி. விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இன்னும் பரவெளியை முற்றாகக் கண்டு காட்டியதில்லை. சித்தர் வரலாற்றுத் தரவுகளை முதன் முதல் தேடித் தொகுத்துப் பதிவு செய்தவர் திரு.ஆ.சிங்காரவேலு முதலியார். இவர் தொகுத்து 1910 இல் வெளியிட்ட தமிழ் உரைநடைக் கலைக்களஞ்சியம் அபிதான சிந்தாமணி. இதனுள் ஆசிரியர்,

> தன் ஆன்மானுபவத்தைப் பிறரும் அறிந்து அவ்வழி நடந்து சீர்பெறப் பிரபஞ்சத்தைச் சுத்த வெளியென்று கண்டு இப்பெயர் அடைந்தவர் என்று தெரிகிறது,

என்று குறித்துள்ளார். கடுவெளிச் சித்தர் பாடல் தொகுப்பில் 22 ஆவது ஆனந்தக் களிப்பில்,

*எட்டும் இரண்டையும் ஓர்ந்து மறை*
*எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து*



www.saivamonline.com

*வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த*
*வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து*

என்று பாடுகின்றார். இதில் வெட்ட வெளியினைச் சார்ந்து என்ற தொடர் ஒன்று காணப்படுகிறது. இதுவரை பரவெளி பற்றிய குறிப்பேதும் இவர் பாடல்களில் இல்லை. எனவே இது ஒன்று பற்றி மட்டும் இவர் இப்பெயர் பெற்றார் எனக் கருதக் கூடவே இல்லை. வேறு பாடல்கள் கால வெள்ளத்தில் கரைந்து போயிருத்தல் கூடும்.

சிவநெறியில் இறைவன் பரம கருணையாளன். ஆணவ மலத்துடன் கட்டுண்டு கிடக்கும் உயிர்களின் ஈடேற்றத்திற்காக இறைவன் அவற்றுக்குத் தனு எனப்படும் உடலை வழங்குகிறான்.

ஆனால்,பிறப்பெடுத்த உயிர்கள் உடலோம்பி வாழ்ந்து மல நீக்கம் பெற்று இறைவன் சேவடிகளில் சார இயலாது, உலக இன்பங்களில் சிக்குண்டு, உடல் கெடச் செத்து அழிகின்றன. நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்ற பாடல் வழி, கடுவெளிச் சித்தர் உரைக்கும் கருத்து இதுவேயாகும். சிவன் ஏவலில் உலகைப் படைக்கும் பிரம்மனைத் தட்டான் என்று திருமூலர் குறித்தார். சித்தர் குயவன் எனக் குறிக்கிறார். நாலாறு மாதம் என்பது கூட்டல்; பத்து மாதம் என்பது கருத்து.

*உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே*

*உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*

என்றும் திருமூலர் குறித்தார். உடம்புக்கும் திருவோட்டுக்கும் சிலேடைப் பொருள்பட, தெய்வச் சேக்கிழார், திருநீலகண்டத்துக் குயவனார் வரலாற்றில், உடம்பு என்பது,

*தன்னை ஒப்பரியது தலத்துத் தன்னுழை*
*துன்னிய யாவையும் தூய்மை செய்வது*
*பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது*

என அறிவுறுத்திச் சென்றார். திருமூலர், சேக்கிழார் நெறியில் கடுவெளிச் சித்தரின் சிந்தனை உருப்பெற்றிருக்கலாம். ஒரு பல்லவியும், முப்பத்து நான்கு சரணங்களும் கொண்டன ஆனந்தக் களிப்பு என்னும் இச்சித்தர் கவிதை. பல்லவியைக் கடுவெளிச்சித்தர்

*பாபம் செய்யாதிரு மனமே - நாளைக்*
*கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்*
*பாபஞ் செய்யாதிரு மனமே*



www.saivamonline.com

என்று அமைத்துப் பாடுகின்றார்.

அறஞ்செய்து- பாபம் தவிர்க்க வேண்டித் தொடங்கும் ஆனந்தக் களிப்பில் அற்புதமான பல கண்ணிகள் இடம் பெற்றுள்ளன. சூது, பொய், மோசம் செய்தால் - செய்தவன் சுற்றம் கெட்டழியும்; உடம்பு என்பது நீர் மேல் குமிழ் போல் நிலை இல்லாதது; மண், பொன், பெண் எனும் மூவாசைகளை விட்டு ஒழி; பிறரிடம் சென்று பிச்சை கேட்டு இரவாதே; வேத, வேதாந்த நெறிகளிலே பயணம் செய்; ஞான குழுவினைப் போற்றி அவர் சொல்வழி நில்; உடல் என்பது ஐந்து பொறிகள் என்னும் காட்டு மரங்கள் சூழ்ந்த காடு; அன்பு எனும் நல்ல மலர் தூவிப் பரமானந்தம் என்ற தேவியின் தாளை அடை என்றெல்லாம் கடுவெளிச்சித்தர் மனித குலத்திற்கு நன்னெறி பல புகல்கின்றார்.

*எட்டும் இரண்டையும் எல்லாம் ஓர்ந்து மறை*
*எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து*
*வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த*
*வெள்ளத்தின் மூழ்கி மிகக் களி கூர்ந்து*

வாழ்வாங்கு வாழ்க என வழிகாட்டி அருளுகின்றார்.

சித்தர் போக்குச்சிவம் போக்கு என்பது பழமொழி. கடுவெளிச் சித்தர் சிவநெறி நின்றவர். இறைநெறியினும் மேலாக அறநெறி போற்றி வாழ அறிவுறுத்தியவர். இம்மை வாழ்வில் சிறந்து வாழ்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியவர். அவர் கவிதைகளில் தாம் எத்தனை எத்தனை அரிய அழகியத் தொடர்கள்:

*நல்ல வழி தனை நாடு.*

*வல்லவர் கூட்டத்தில் கூடு.*

*மெய்ஞ்ஞானப் பாதையில் ஏறு.*

*கூட வருவது ஒன்றில்லை.*

*பாரில் உயர்ந்தது பத்தி.*

*பொய்வேதம் தன்னைப் பாராதே.*

*வைதாரைக் கூட வையாதே.*

*சிவமன்றி வேறே வேண்டாதே.*

*போற்றும் சடங்கை நண்ணாதே.*

*கள்ள வேடம் புனையாதே.*



www.saivamonline.com

இத்தகு நல்லறிவு கொளுத்தும் பல அரிய தொடர்கள் கடுவெளிச் சித்தர் கவிதைகளிலே நிறைந்து காணப்படுகின்றன.

கஞ்சா என்ற ஒரு வகைச் செடியின் இலைகளைக் கொண்டு புகை பிடித்து மயங்கும் ஒரு சமூகம் சித்தர் காலத்தில் நிலவியிருந்திருக்க வேண்டும். மயக்கும் கள் குடிக்கும் கூட்டமும் வாழ்ந்திருந்த காலம் போலும்.

*கஞ்சா புகைப் பிடியாதே - நெறி*
*காட்டி மயங்கிய கட்குடி யாதே*

என எச்சரிக்கிறார் இறைவன் என்பவன் தண்ணளி மிக்கவன். அன்புடையார் இதயத்தில் குடிபுகுந்து வாழ்பவன். மிக்க அடிமைத்திறம் கொண்ட அடியார்களுக்குத் தானும் தொண்டு பூணும் எண்ணம் மிக்கவன். தன்னைப் போற்றி உரைப்பார்க்குச் சிவலோகம் முதலான உயர் பதவிகள் வழங்குவான்.

*எங்கும் சுயம்பிரகாசன் - அன்பர்*
*இன்ப இருதயத் திருந்திடும் வாசன்*
*துங்க அடியவர்தாசன் - தன்னைத்*
*துதிக்கிற பதவி அருளுவான் ஈசன்*

இவ்வாறு பாடல் நெறி, குறிப்பிடப்பட்டுள்ள சில செய்திகள், சில வகைத் தொடர்களை ஆளுதல் முதலியவற்றை ஒப்ப வைத்து ஆராய்ந்தால் இக்கடுவெளிச் சித்தர் 15 ஆம் நூற்றாண்டினராதல் கூடும் என அறிய முடிகிறது.

இவர் பாடியனவாக வேறு நூல்களோ பாடல்களோ கிடைத்தில. இவர் வரலாறு குறித்து ஒன்றும் தெரிந்திலது. அறநெறிக் கருத்துக்களைச் சைவ மரபுக் கருத்துக்களோடு இணைத்துச் சந்தக் கவிதை தந்தவர் இவர் என்றே தெரிய வருகிறது.

## 10. அழகணிச் சித்தர்

அழகும், அணிநயமும் நிரம்பிய இனிய கவிதைகளை வழங்கினார் ஒரு சித்தர். அவர் பெயர் தெரியவில்லை. எனவே, பின்வந்தோர் அவரை, அவர் கவிதை அழகைக் கருத்தில் கொண்டு அழகு அணிச் சித்தர் என அழைத்தர். காலப்போக்கில் அப்பெயர் திரிந்து, அவரை அழுகுணிச் சித்தர், அழுகணிச் சித்தர் என்றெல்லாம் மக்கள் அழைக்கத் தொடங்கினார்.



www.saivamonline.com

இவர் பெயரும் நவநாத சித்தர்கள், பதினெண் சித்தர்கள் பட்டியலில் இடம் பெறவில்லை. பாரதியாருக்கு முன்னதாகப் பெண் ஒருத்தியைக் கண்ணம்மா என விளத்துப் பாடியவர் இவரே. இவர் இயற்றியனவாக 40 கலித்தாழிசைப் பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன. இவர் வரலாறு பற்றியோ, காலம் பற்றியோ ஏதும் தெரிந்தில.

நாம் இவரை அழகணிச் சித்தர் என்றே அழைக்கலாம். இவர் பாடல்களில் காணப்படும் சிலவகைச் சொல்லாட்சிகள் இவரை கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, பஞ்சாயக்காரர் (2), ஆக்கினைக்குத் தான் பயந்து (2) தேனாமிர்தம் (4), கூடுதில்லை(7), கிட்டுவதில்லை(8), சாகவல்லோ(9), மச்சினியோ நானறியேன் (11), தோணாமல்(17), உண்ணாக்கு (20), சாயச்சரக் கெடுத்து (21), ராசாக்கள் (24), நிட்டூரன் (27), பரக்க விழிக்கிரண்டி(31), ஆத்தாடி (33-40) போன்ற சொல்லாட்சிகள் இவர் வாழ்ந்த காலத்தை ஓரளவு தீர்மானிக்க உதவுகின்றன.

முதல் 32 பாடல்களில் காணப்படும் கண்ணம்மா என்ற விளிகள் சிவசக்தியாகிய உமையைக் குறிப்பனவாகவே தெரிகின்றன.

***கண்ணம்மா உன் பாதம் சேரேனோ?***

***கண்ணம்மா கண் குளிரக் காண்பேனோ?***

***அஞ்சாதே என்று சொல்லி என கண்ணம்மா ஆண்டிருந்தால் ஆகாதோ?***

***கண்ணம்மா பொருள் எனக்குத் தாரோயோ?***

***கண்ணம்மா விழித்து வெளி காட்டாயோ?***

எனவரும் பதிவுகள் இதனை உறுதி செய்கின்றன. சித்தர் போக்குச் சிவம் போக்கு எனக் கூறப்பட்டாலும், சிவ சக்தியை, வாலை எனப் பெயரிட்டு வணங்கும் போக்கு, சித்தர் நூல்களிலே காணப்படுகிறது. விழித்து வெளி காட்டாயோ என்ற பதிவால் சிவனையே சிவசக்தியாக உருவகித்துப் பாடியுள்ளார் என்றும் கருத இடம் உள்ளது.

நில்லாத உலகியல்பு கண்டு, நிலையா வாழ்க்கை இது என்று உணர்ந்து, துறவில் தலைப்பட்டு, வீடு பேற்றை வேண்டி நிற்கும் சித்தரின் உள்ளப் பாங்கைப் பாடல்கள் எங்கும் பரவலாகக் காண முடிகிறது. உடம்பை இவர் ஊற்றைச் சடலம் என்று குறிப்பிடுகிறார். சைவ சித்தாந்தம் பிற்காலத்தே விரித்த 96 தத்துவங்களை இவர், தொண்ணூற்றோடு ஆறதிலே என்று பதிவு செய்கிறார்.

மயக்கம் தரும் கஞ்சா என்ற போதைப் பொருளைக் கஞ்சா



www.saivamonline.com

வெறியனடி எனத் தன் மேலிட்டுக் குறித்துக் காட்டுகிறார். சைவ சித்தாந்தம் பேசும் ஆறு ஆதாரங்கள் இவரால் சுட்டப்பட்டுள்ளன. மலர் தூவி வழிபடும் பூசை முறைகளை ஏற்கிறார். சிவனைத் தோற்றம் ஒடுக்கமில்லாத் தொல்பொருள் எனக் குறிக்கிறார். இவர் சிவநெறி நின்று வீடுபேற்றை விரும்பியவர் என்பதற்குச் சான்றுகள் வேறு பலவும் இவர் கவிதைகளிலே நிறைந்துள்ளன.

மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை என உடலை மாணிக்கவாசகர் திருவாசகம் சிவபுராணத்துள் குறித்தார். உடலை வெறுத்துப் பேசும் சித்தர் மரபில் வந்த இவரும்,

*ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி*
*மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை*

எனக் குறித்து, உடல்விட்டு, இன்பமயமான வீடுபேற்றை வழங்குமாறு யாசிக்கிறார். வைத்துக் கொண்டே, இலன் என்னும் எவ்வம் உரைக்கும் கீழோரிடம் சென்று கையேந்தி நிற்கும் நிலை வாராது காத்தருளக் கண்ணம்மாவிடம் வேண்டுகோள் வைக்கிறார்.

*புல்லரிடத்தில் போய்ப் பொருள் தனக்குக் கையேந்திப்*
*பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி*
*பல்லை மிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்*
*புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா*
*பொருள் எனக்குத் தாராயோ?*

கண்ணம்மாவோடு, விநாயகப் பெருமானையும் சித்தர்,

*ஐங்கரனைத் தெண்டனிட்டேன்*
*அருளடைய வேணுமென்று*
*தாங்காமல் வந்தொருவன்- ஆத்தாடி*
*தற்சொரூபம் காட்டி யென்னே?*

என வினவி அருள் வேண்டி நிற்கிறார். சித்தர்கள் பாடல்களில் பரிபாஷைகளும், தத்துவக் குறியீடுகளும் நிறைந்திருக்கும். பலவற்றிற்கு உண்மைப் பொருள் கூறுவார் எவரும் இலர். அழகணிச் சித்தர் பாடல்களிலும் இவ்வாறான குறியீடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இத்தகைய மறைபொருள் உரையாடல்களால்தாம் சித்தர் இலக்கியம் மக்களைச் சென்றடையாமல் உள்ளது. சில எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

*முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே*
*பத்தாம் இதழ் பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி*



www.saivamonline.com

*எட்டாப் புரவியடி ஈறாறு காலடியோ விட்டானும் பாரமடி*
*மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி*
*நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடு கட்டிச்*
*சாய்ச் சரக்கெடுத்தே சாதிலிங்கம் தான் சேர்த்து*
*மாயப் பொடிகலந்து வானுழுவை நெய்யூற்றிப்*
*பாதாள மூலியடி பாடாணம் தான் சேர்த்து*
*வேதாளம் கூட்டியல்லோ வெண்டாரை நெய்யூற்றி*

இவ்வாறான பூடகப் பதிவுகளைச் சித்தர்கள் கையாண்டதற்கான காரணம் புலப்பட்டிலது. திருமந்திரம் போன்ற நூல்களில் பூடக உரையாடல்களைச் சூனிய சம்பாஷணை என ஒரு தலைப்பில் அடக்கி, எஞ்சிய பகுதிகளைப் புரியுமாறு படைத்த அருமைப் பாட்டைச் சித்தர்கள் ஏற்றுப் போற்றாமை ஏன் என்பது புலப்பட்டிலது. நிறைவாகச் சித்தர் அமைத்துள்ள கண்ணிகளில் கிரியை வழிபாட்டு நெறி போற்றப்பட்டுள்ளது. மஞ்சன நீராட்டு, மலர் பறித்துத் தூவுதல்; பாடிப் படித்துப் பன்மலர்கள் சாத்துதல் முதலியனவற்றைப் பேசும் சித்தர், சிவனைப் பலபடப் போற்றி நிறைவு செய்கிறார். திரிபுரம் எரித்த வரலாற்றை, சூதான கோட்டை எல்லாம் சுட்டான் துரிசறவே எனக் குறிக்கிறார். இறைவன் மாணிக்கத்து உள் ஒளி போல் உலகெங்கும் மருவி நிற்பவன் என்று அடையாளப்படுத்துகிறார். சிவனைப் பேசாப் பெருமையன் எனச் சிறப்பிக்கவும் செய்கிறார். பிறவா நெறிக்கு வழி அறியாதார்போல் இச்சித்தர் பாடியுள்ள ஒரு பாடல் யாவரும் அறிந்த ஒன்று.

***ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி***
***மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை***
***மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்***
***ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மா***
***உன்பாதம் சேரேனோ?***

## 11. சட்டை முனி

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை பலவகைப்படும். திருமூல நாயனாரை முதல்வராகக் கொண்டு விரிந்த பரம்பரை குறிக்கத்தக்க ஒன்றாகும். திருமூலர் மரபு பற்றிய பல அரிய பதிவுகள் திருமந்திரத்திலேயே காணக் கிடக்கின்றன. கயிலை மாமலையில் திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்ற மாணாக்கர் எண்மர். அவர்களுள் ஒருவர் திருமூலர். இதனைத் திருமந்திரம்,



www.saivamonline.com

*நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்*
*நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி*
*மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்*
*என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே*

எனப்பதிவு செய்து நிற்கிறது.

திருநந்திதேவர் வழி ஒரு பரம்பரை சிறந்ததைப் போலத் திருமூலரை முதல்வராகக் கொண்டு ஒரு சீடர் பரம்பரை விரிந்தது. அவர்கள் எழுவராவர். 1.மாலாங்கன், 2. இந்திரன், 3. சோமன், 4.பிரமன், 5. உருத்திரன், 6. தறிபோன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி(காலாங்கி), 7. கஞ்சமலையன் .

இதனைத் திருமந்திரம்,

*மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்*
*இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்*
*கந்துருக் காலாங்கி கஞ்சமலையனோடு*
*இந்த எழுவரும் என்வழியாமே*

எனப் பதிவு செய்கிறது. இதனுள் ஆறாவதாகக் குறிக்கப்பட்டவர் காலாங்கிநாதர் என்பவர். இவரைக் காலாக்கினி என்றும் குறிப்பர். திருமூலர் தரும் அடைமொழிகளால், நடப்பட்ட கட்டுத்தறி போல ஆடாது அசையாது யோக நிட்டையில் இருந்தவர் காலாங்கிநாதர் என்பது தெரிய வருகிறது. காலாங்கி என்பது ஊழித்தீ என்ற பொருள் தருவது. காலாங்கி நாதரின் தலை மாணாக்கரே பழனியில் சமாதி ஆகியுள்ள போகர்.

போகர் ஒரு பெரிய சித்தர் கணத் தலைவராகக் கருதப்படுகிறார். ஆதிகாலத்தில் சிவபெருமான் அருளிச்செய்த எழுநூறாயிரம் சூத்திரங்களைப் போகர் ஏழு காண்டத்துள் அடக்கித் தம் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தினார். இவர் மாணாக்கருள் முதன்மை பெற்ற ஒருவர் புலிப்பாணி.

ஏனைய போகரின் மாணாக்கர் பலருள்ளும் குறிக்கத்தக்க ஒருவர் சட்டை முனி என்பார். பதினெண் சித்தர்களில் இவரும் ஒருவராகக் குறிக்கப்படுகிறார். பாம்பின் மேல் தோன்றும் ஒருவகைத் தோலைச் சட்டை எனக் குறிப்பர். ஆடவர்கள் அணியும் உடை வகைகளுள் ஒன்று சட்டை. சிலப்பதிகாரம் இதனை மெய்ப்புகுபை என்று குறிக்கிறது. சட்டை என்பது பிற்கால வழக்கு.

சட்டை முனி என்ற பெயர்க்காரணம் விளங்கவில்லை. சீர்காழி



www.saivamonline.com

கட்டுமலை உச்சியில் அடியார் கோலத்தில் நிற்கும் இறைவனுக்குச் சட்டைநாதர் என்பது பெயர். யானைத் தோலை உரித்துப் போர்த்தியவர் என்ற கருத்தில் இப்பெயர் அமைந்தது.

சட்டைமுனி வரலாறு குறித்து விரிவான செய்திகள் கிடைத்தில. ஒரு சிலர் இவர் அகத்தியர் காலத்திலேயே வாழ்ந்திருந்த மருத்துவர் என்கின்றனர். சித்தர் நூல்கள் பலவும் இவரைப் போகரின் மாணவராகவே குறிக்கின்றன. இவர் சேணியர் மரபினர் என்ற குறிப்பும் உள்ளது. இவர் உரோம முனிவரோடு மாறு கொண்டிருந்தார் என்பது அந்த வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

இவர் செய்த நூல்களாகச் சட்டைமுனி ஞானம் 200, சட்டை முனி 1200, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, சடாட்சரக் கோவை, கல்பம் நூறு, ஞானம் நூறு, வாத நிகண்டு என்பன அறிய வந்துள்ளன. இவை பலவும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

சட்டைமுனி ஞானம் என்ற இவரது நூலில் 200 என்று குறிக்கப்பட்டிருந்தாலும், இன்று 12 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. எண்சீர் ஆசிரிய விருத்தங்களாகக் கொண்டால் 6 பாடல்களாக இவை அடங்கும். கிடைத்துள்ள இப்பாடல்கள் பூசை விதிகள் சிலவற்றைக் கூறுகின்றன.

பூசை செய்யும் முறைகள் பல்வுண்டு. சிவலிங்கத்தையோ, தீபத்தையோ, முருகன் முதலிய திருமேனிகளையோ முன்வைத்துப் பூசிக்கும் முறை நாம் அறிந்தது. சட்டைமுனி வேறு முன் வைத்துப் பூசிக்கப்படுவன சிலவற்றை முதலாகக் குறிக்கிறார். அடுத்து சித்தர்கள் பூசை ஏற்கும் முறை இன்னது என்பதையும் முன் வைக்கிறார். பூசையில்,

1. சுவடிகளை வைத்துப் பூசித்தல், 2. தீபம் ஏற்றி வைத்துப் பூசித்தல் ,
3. பெண்களையே, வாலை என முன் அமர்வித்துப் பூசித்தல்
4. சக்கரங்கள் எழுதப்பெற்ற யந்திரங்களை முன்வைத்துப் பூசித்தல்,
5. மகாமேருவை முன்வைத்துப் பூசித்தல்

என்பன பலவகை. சித்தர்களோ மேரு போல நாற்பத்து முக்கோணம் அமைந்த மகாமேருவை முன் வைத்துப் பூசிக்கும் நெறியினர் என்கிறார் இவர். மேருவின் அமைப்பு, மேரு பூசையின் பயன், பூசிப்பார் தகுதி முதலியவற்றை விளக்கும் சட்டை முனி, மேரு பூசை செய்வார் பெறும் ஆற்றல் எவை என்பதையும் விளக்குகிறார்.

மேரு வான் வடிவத்தை நினைப்பிக்கும் ஒரு குறி. மேரு பூசை செய்து நிரம்பப் பெற்ற சித்தர்கள், சிவனருள் நினைந்து உபதேசித்தால் மாணாக்கர்களுக்கு, வாதசித்தி, கவனசித்தி என்பன ஒரு சேர அமையும்.



www.saivamonline.com

*வரனென்ற மேருவைத்தான் பூசை செய்தோர்*
*வாய்திறந்தே உபதேசம் சொன்னா ராகில்*
*கோனென்ற வாத சித்தி கவனசித்தி*
*கொள்ளைமாட்டான் அவன் சீடன் கூறினானே*

மேலும், இப்பாடல் பகுதியில் வாலைக்கு உரிய மூன்றெழுத்து, திரிபுரைக்கு உரிய எட்டெழுத்து, புவனைக்கு உரிய எழுத்து, யாமளைக்கு உரிய ஆறெழுத்து, ஐவகை தீட்சை, வாசியோகம் என்பன பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

மேற்குறித்த உமையம்மை குறித்த நாமமும் எழுத்தும், அறிந்து, தீட்சாகிரமத்தால் பூசனை செய்வார்க்கு

*காயசித்தி விக்கினங்கள் இல்லை இல்லை*

என்று சட்டைமுனி உறுதி செய்கிறார்.

சட்டை முனியின் இந்த ஞானப் பகுதியில் வேறு சில குறிப்புகளும் காணப்படுகின்றன. தியங்கினால், கெர்ச்சித்து, மிலேச்சர், மாய்கை, எப்போ முதலான உலக வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன. இவை பலவும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன. இத்தகு பாடல்கள், சித்தர் கருத்துக்குப் பின்வந்தோர் தந்த பாடல் வடிவங்களாகவே கொள்ளத்தக்கன. பழனிமலைக் கோயில், சேரமான் பெருமாள் நாயனரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே, கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராக இவர் காலம் அமைதல் கூடும்.

## 12. உரோம முனி

உரோமமுனி பதினெண் சித்தர்கள் வரிசையில் ஒன்பதாவதாகக் குறிக்கப்பட்டுள்ளார். இவரை உரோமரிஷி என்றும் சித்தர் நூலார் குறிக்கின்றனர். இவரைப் பெருநூல் காவியம் படைத்த காகபுஜண்டரின் குமாரர் எனக் குறித்துள்ளனர். இவர் செய்த நூல்களுள் ஒன்று தீட்சை என்பது. இவர் போகரிடம் மாணவராக இருந்து ஞானம் பெற்றவர். இவரின் ஒரு சாலை மாணாக்கர் சட்டைமுனி.

ஒருமுறை உரோமமுனிக்கும், சட்டைமுனிக்கும் பிணக்குத் தோன்ற, சினத்தில் சட்டைமுனி உரோமமுனி செய்த தீட்சை நூலைக் கிழித்தெறிய முயன்றார். அக்காலை, காகபுஜண்டர் குறுக்கிட்டு, தம்மகன் செய்த நூலைத் தம் சடைமுடியில் ஒளித்து வைத்தார். தீட்சை நூலை புஜண்டர் அகத்தியரிடம் ஒப்படைத்தார். பல ஆண்டுகள் கழித்து அந்நூலை அகத்தியர் உரோமரிஷியிடம் வழங்கினார். இவருக்கு



www.saivamonline.com

உடம்பெல்லாம் உரோமம் மண்டியிருந்ததால் இவர் உரோமமுனி என அழைக்கப்பட்டார். உரோம நாட்டுக்கும் இவருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பார் கூற்று ஏற்புடையது அன்று.

## உரோமமுனி நூல்கள்

உரோமமுனி வரலாறு குறித்து வேறு செய்திகள் ஒனறும் கிடைக்கவில்லை. அபிதான சிந்தாமணி என்ற நூல் இவர் உடலில் உள்ள ஒரு உரோமம் ஒரு பிரமன் இறந்தால் உதிரும் என்றும், இவ்வாறு 3½ கோடி பிரம்மாக்கள் இறந்தால்தான் இவர் ஆயுள் முடியும் என்றும் குறித்துள்ளது. உரோமரிஷி இறந்தால் அட்டகோண ரிஷி என்ற சித்தரின் உடலில் உள்ள ஒரு கோணம் நிமிரும் என்றும் அந்நூல் குறிக்கிறது. இவற்றை ஏற்கவும் இயலவில்லை. தள்ளவும் கூடவில்லை.

சித்தர்கள் திருமூலரைப் போல் பல்லாண்டுகள் வாழ்ந்தவர்கள் என்பது மட்டும் உறுதி. உரோமரிஷி இயற்றினவாக உரோமமுனி நூறு, ஐந்நூறு, ஐம்புள் என்ற நூல்கள் அறிய வருகின்றன. உரோமமுனி ஞானம் என்ற சிறுநூல் ஒன்றும் இவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலுள் 26 கண்ணிகள் காணப்படுகின்றன. உலகம் முழுவதும் சித்தாடல்கள் பலவற்றைச் செய்யும் சித்தமூர்த்திகள் பலரின் பாதங்களை நம்பிக்கையோடு தொழுததனால் நான் உரோமன் என்று அழைக்கப்பட்டேன் என்று ஒரு பதிவு உள்ளது.

*ஞாலவட்டம் சித்தாகும் பெரியோர்பாதம்*
*நம்பினதால் உரோமன் என்பேர் நாயன்தானே*

என்ற தொடரில், பெயர்க்காரணம் புலப்பட்டுத் தோன்றவில்லை.

## உரோமமுனி ஞானம் : காப்பு

உரோமமுனி அருளிய ஞானம் அழகிய காப்புச் செய்யுள் ஒன்றுடன் தொடங்குகிறது. இதில் முதலில் ஞானகுருவின் பாதங்களே காக்கட்டும் என்று தொடங்குகின்றார். அடுத்துச் சிவனைக் காக்க வேண்டுகின்றார். சிவனை இவர்

*முத்திக்கு வித்தான முதல்,*

*பரப்பிரம்மம்,*

*வேதாந்தம் கடந்து நின்ற மெய்*

என்றெல்லாம் போற்றிக் காத்தருள விரும்பி வேண்டுகின்றார் சித்தர்களை. காலம் கடந்த பெரியோர்கள் என்றும், ஞானம் என்ற அமுதப்பாலுண்டு வாழ்பவர்கள் என்றும், வஞ்சனைகள் முற்றிலும்



www.saivamonline.com

இல்லாத தூயமனத்தினர் என்றும் குறித்துள்ளார்.

*காலவட்டம் தங்கம் மதி அமுதப் பாலைக்*
*கண்டு பசியாற்றி மனச் சுவடு நீக்கி...*

என்பது சித்தரின் பதிவு. சிவநெறியே சித்தர் நெறி என்பது நூல் முழுவதும் விளங்கித் தோன்றுகின்றது. இவர் பாடல் பதிப்புக்களில் ஏராளமான பிழைகள் மலிந்துள்ளன. பிராணாயாமம் பற்றியும், இடகலை, பிங்கலை, சுழி முனை முதலிய கூறுகள் பற்றியும் பலவற்றை இந்நூல் தாங்கி நடையாடுகிறது. பிற்காலச் சித்தர் பாடல்களில் காணப்படும் பேச்சு வழக்கு விளிகள் இவர் பாடல்களிலும் பாரையா, தேரையா, கூறய்யா, ஆரையா என்றெல்லாம் இடம் பெற்றுள்ளன. திருமூலரின் பாடல்களில் காணப்படும் பிராணயாமம் குறித்த கருத்துக்கள் பலவும் இவரது இந்நூலிலும் வழிமொழியப்பட்டுள்ளன.

## சித்தி-முத்தி வாயில்கள்

உரோமமுனி சித்தி பெறுவதற்கும், முத்தி பெறுவதற்கும் உரிய வழி முறைகளை இந்நூலுள் முன்வைத்துப் பாடியுள்ளார். நால்வகை முத்தி மார்க்கங்களுள் ஒன்று யோகம் எனப்படுவது. யோகம் என்பது கூடுதல். மன ஒருமைப்பாடு. சொல் விட்டுச் சும்மா இருத்தல். உலக இன்பங்களைத் துய்க்கும் நிலையிலும் அவற்றுள் ஆழ்ந்துவிடாது அன்னியப்பட்டு நிற்றல். அந்த யோகத்தை விட்டவர்க்குச் சித்திகள் ஏதும் இல்லை. சிவ ஞான சித்திக்கு யோகமே வாயில் என்பதை உரோமமுனி,

*ஒண்ணான மவுனமென்றே யோகம் விட்டால்*
*ஒரு போதும் சித்தியில்லை*

என்கிறார்.

ஒன்றான மவுனம் என்னும், என்று பாடம் ஓதினால் கருத்துச் சிறக்கும். அடுத்து முத்திக்கு வாயில் எது என்று கூறவந்த சித்தர்,

*பெண்ணார்தம் ஆசைகளை விட்டு வந்தால்*
*பேரின்ப முத்திவழி பேசுவேனே*

என்று நிறைவிக்கிறார். பெண்ணாசை நீங்கினால் அவ்வாறு வீடுபேறு சித்திக்கும் என்பதை உறுதி செய்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் சேக்கிழார் அவர் பரவையாரோடு இன்பந்துய்த்த போதும், அவ்வின்பத்திலிருந்து அன்னியப்பட்டு யோக நெறி நின்ற திறம் பேசுவது இங்கே நினைவு கூரத்தக்கது.


www.saivamonline.com

## குரு-சீட பரம்பரை:

சித்தர் நெறியில் உபதேச பரம்பரை நீள வளர்ந்தமைந்தது. திருமூலர் மரபு, போகர் மரபு, அகத்தியர் மரபு எனப் பல மரபுகள் நிலவுகின்றன. ஆசிரியர்-மாணவர் உறவு சித்தர் மரபில் மிக உன்னதமானது. சீடர்களைப் பலகாலும் சோதித்து அவர் தகுதி அறிந்த பின்னரே மாணாக்கராக ஏற்பர். இதனை விளக்கும் நிகழ்வுகள் பல சித்தர் வரலாறுகளில் காணக்கிடக்கின்றன. சித்தர்கள் இருவகையர். ஒன்று தூய துறவு நெறி நின்றார். மற்றொன்று இல்லறத்தார். இல்லறத்தில் நின்றாலும் பந்தங்களிலிருந்து ஒருகால் விடுபட்டு வந்தாரே மாணாக்கராக இயலும். இவற்றை எல்லாம் உள்ளடக்கி உரோமமுனி,

*அழைப்பதுவும் நல்லபிள்ளை ஆனால் நன்றே*
*ஆகாத சீடர்களைச் சேர்த்தல் தோடம்*
*பிழைப்பதற்கு வழி சொன்னால் பார்க்க மாட்டான்*
*பெண்டாட்டி மனங்குளிரப் பேசும் மாடு*

என்று அழகிய பாடல் ஒன்றைப் பதிவு செய்கிறார். மனைவி பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாது தலையாட்டி நிற்பவன் என்ற பொருளில், பேசும் மாடு என்று பதிவு செய்ததில் எள்ளல் கலந்து வருவது புரிகிறது.

## மனித ஆயுள் - நூறு

மனித வாழ்வு ஒரு நூறு ஆண்டுகள் கொண்டது என்று கூறும் சித்தர், ஒரு நாளைக்கு ஒரு மனிதன் மூச்சுக் காற்றை உள்வாங்கி, வெளிவிடும் செயல் இருபத்தோராயிரத்து அறுநூறு என்று கணக்கிட்டும் உரைக்கிறார். இந்த எண்ணிக்கையைக் கடவாது மூச்சுப் பயிற்சிச் செய்வார் நூறாண்டு வாழ்வர். சுவாசம் கூடினாலும், குறைந்தாலும் ஆயுள் குறையும் என்கிறார்.

*உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே*
*ஆமென்றே இருபத்தோ ராயிரத்தோடு*
*அறுநூறு சுவாசமல்லோ ஒரு நாளைக்கு*

என்றும்

*போம் என்று போனதால் நாள் குறைந்து*
*போச்சுது; போகாவிட்டால் போவதில்லை*
*தாம் ஒன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று*
*தான் நினைந்த தன்மை அல்லோ விதிகள் தாமே*

என்றும் வரும் அரிய தொடர்கள் மனிதர்கள் நினைவு கூரத்தக்கன.


www.saivamonline.com